www.padippakam.com

பெண்ணடிமை தீராமல் மண்ணடிமை தீராது

# பெண் உரிமை

நவம்பர் '95 - ஏப்ரல் '96



## த. பெ. கழகத்தினரால் தீக்கிரையாக்கப்பட்ட

# ஆபாசப் படச் சுருள்

படிப்பகம்

www.padippakam.com

# போராட்டப் பாதையில்...

★ எங்கும் ஆபாசம்
எதிலும் ஆபாசம்
சோப்புக்கு மட்டுமல்ல ..
சிகரெட்டுக்கும்
பெண்ணின் ஆபாசப்படம்..

★ ஆபாசத்தை விலக்க
ஆலாபனை செய்கின்றன
சங்கங்கள் பல...
சந்தடிச் சாக்கில்
குரல் கொடுத்து
சப்தமின்றி பதுங்கும்
இவை
இருந்தும் பயனென்ன...

★ விதிவிலக்காய் ஒரு கழகம்
உண்மையாய் உழைக்கிறது.
பெண்டிர் உரிமைக்
குரலோடு
போராட்டப் பாதைவகுத்து
அண்ணா சாலையில்
மஞ்சள் இதழ்களையும்
நெருப்புக் கணைகளால்
சிவப்பு இதழ்களாக்கிய
பெண்ணுரிமைக் கழகமே...
இது!

★ மதுரை மாநகரில்
மக்கள் பணம் பறித்து
மக்களின் உள்ளத்தில்
நஞ்சூட்டிய
நீலப்படச் சுருள்
தடையின்றி உழன்றது!
அறிந்ததும் கிளர்ந்தனர்
பெண்ணுரிமைக் கழகத்தார்!
சீறினர் சிங்கமாய்
நீலப்படச் சுருளை
நீசர்களின் பிழைப்புச்
சுருளைக்
கொளுத்தினர்!
விழிப்புணர்வுச் சுடரை
ஏற்றினர்!

★ மேலை நாட்டு
ஆபாசப் பண்பாட்டை
மொத்தமாக ஒழித்திட
போராட்டப் பாதையிலே
வீறு நடை போட்டிடு!
பெண்ணுரிமை கழகத்துடன்
ஒன்றிணைந்து
புதிய ஜனநாயகப்
பண்பாட்டைப்
படைத்திடுவோம்!

**பொன்னி**


## பெண் உரிமை

2-4,5,6
நவம்பர் '95 - ஏப்ரல் '96
[தனிச் சுற்றுக்கு மட்டும்]

□ □ □

நன்கொடை :
ரூ. 4/-
ஆண்டு சந்தா ரூ. 30.00

□ □ □

இதழின் தொடர்புக்கு :
**உமாவதி**
நெ. 37/33
இராணி அண்ணாநகர்,
கே.கே. நகர்,
சென்னை - 600 078.

□ □ □

அச்சிட்டவர் :
**தீஸ்மாஸ் டிசெல்வா**
சூசைநாயகம் ஆர்ட்பிரிண்டர்ஸ்
சென்னை-94




படிப்பகம்

www.padippakam.com

# பெண் உரிமைக்காக...

**அன்பார்ந்த நண்பர்களே !**

சென்ற இதழில் வெளியிடப்பட்டிருந்த, கட்டுரைகளுக்கும், கவிதைகளுக்கும் உங்களிடமிருந்து வந்த வரவேற்பு எங்களை உற்சாக மூட்டியுள்ளது. அதே சமயம் இதழில் இருந்த எழுத்துப் பிழைகளையும் சுட்டிக்காட்டி விமர்சித்தீர்கள். உங்களின் விமர்சனங்களுக்கு பதிலுடன் இந்த இதழ் வெளி வருகின்றது.

நண்பர்களே ! 'பெண் உரிமை'யின் முதல் இதழில் இராஜஸ்தான் மாநிலத்தில் பெண்கள் வளர்ச்சி இயக்கத்தின் பன்வாரி என்ற பெண் ஒருவயதுக் குழந்தைத் திருமணத்தை தடுத்த சில நாட்களில் அவரும், அவருடைய கணவரும் வேலை செய்துக் கொண்டிருக்கையில் ஐந்து உயர்சாதி குண்டர்களால் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்பட்ட நிகழ்ச்சியை வெளியிட்டது உங்களனைவருக்கும் நினைவிருக்கும் என்று நம்புகின்றோம். ஜெய்ப்பூர் நீதிமன்றம் கடந்த நவம்பர் 15ஆம் நாளன்று வழங்கிய இந்த வழக்கின் தீர்ப்பு நம்மை அதிர்ச்சிக்கு உள்ளாக்கி உள்ளது. நீதிமன்றங்கள் பெண்கள் பிரச்சனைகளை தீர்க்க வக்கற்றது என்ற யதார்த்த உண்மையை நமக்கு வெட்ட வெளிச்சத்திற்கு படம் பிடித்து காட்டியுள்ளது.

ஆம் ! நண்பர்களே! பன்வாரியை பாலியல் வன்முறை செய்த ஐந்து குண்டர்களையும் குற்றமே செய்யவில்லை என்று விடுவித்துள்ளது, ஜெய்ப்பூர் நீதிமன்றம் !

(1) இன்று இந்தியாவில் குறிப்பாக கிராமங்களில் மேல் சாதிக்காரன், கீழ் சாதிக்கார மக்களை குறிப்பாக பெண்களை பாலியல் ரீதியாக ஒடுக்குவது தினம் தினம் நடைபெறும் நிகழ்ச்சியாக உள்ளது. இந்த யதார்த்தத்தை ஏற்க மறுத்த நீதிபதி உயர்சாதிக்காரர்கள் பன்வாரியை பாலியல் வன்முறை செய்திருக்க வாய்ப்பே இல்லை, என்றும்...

(2) ஓர் ஆணை ஐந்து குண்டர்கள் கட்டி மரத்தில் போட்டுவிட்டு, பின் அவன் கண்முன்னே மனைவியை பாலியல் வன்முறை செய்யும் போது எந்த ஒரு மனிதனாலும் எப்படி காப்பாற்ற முடியும் என்பதை சிறிதும் கூட சிந்திக்க தயாராயில்லாத



படிப்பகம்

www.padippakam.com

நீதிபதி, கணவன் முன்பு எப்படி மனைவியை பாலியல் வன்முறை செய்ய முடியும், என்றும்...

(3) இன்றைய காலகட்டத்தில் ஒரு பெண் பாலியல் கொடுமைக்கு ஆளாக்கப்பட்டவுடன் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தாலும், 'நீதான் ஒழுங்கற்றவள்' என்று கூறி புகாரை ஏற்க மறுக்கின்ற போலீஸின் நிலையையும், பிற்போக்கு ஆணாதிக்க சமூகத்தில் இனி 'தனக்கு மதிப்பே கிடையாதே' என்று கூனி குறுகிக் கொண்டிருந்த பன்வாரியின் மன நிலையை சிறிதும் கூட சிந்திக்க தயாராயில்லாத நீதிபதி பாலியல் வன்முறை நடைபெற்ற உடன் 'முதல் தகவல் அறிக்கையை' போலீஸிடம் பதிவு செய்யவில்லை என்றும்,

பல்வேறு உண்மைக்கு புறம்பான காரணங்களைக் காட்டி பன்வாரிக்கு எதிராக, பாலியல் வன்முறை செய்த கயவர்களுக்கு ஆதரவாக தீர்ப்பளித்துள்ளது ஜெய்ப்பூர் நீதிமன்றம்!

'குற்றவாளிகளை தண்டிப்பதே தங்களுடைய நோக்கம் என்று மார்தட்டிக் கொண்டு உலாவி வரும், சிபிஐ - (CBI) கூட இந்த வழக்கில் பாதிக்கப்பட்ட பன்வாரிக்கு நீதி வழங்கித் தர வக்கற்றது என்பது இந்த வழக்கில் அம்பலப்பட்டுள்ளது.

ஓர் இந்திய 'ஜனநாயக' 'சுதந்திர' நாட்டின் இலட்சணம் இதுதான். குழந்தைத் திருமணத்தை தடுக்க சென்று பல அவலங்களுக்கு உட்படுத்தப்பட்ட பெண்ணுக்கு நீதி வழங்கக்கூட தயாராயில்லை இன்றைய அரசும்! நீதி மன்றங்களும்!

இந்த அரசும், நீதிமன்றங்களும் நிலவுடைமைப் பண்பாடான குழந்தை திருமணத்தை நிலை நிறுத்த துடியாய் துடிக்கின்றன என்பது தெளிவாக புலப்படுகின்றது!

இந்த அரசையும், நீதிமன்றத்தையும் நம்பி, நம்பி நாம் இது நாள் வரை மோசம் போனது போதும்!

நம் உரிமைக்காக பொங்கி எழுவோம்!

நண்பர்களே!

உங்களின் ஆதரவால் வளர்ந்துக் கொண்டிருக்கும் 'பெண் உரிமை' உங்களின் ஆதரவை தேடி வருகின்றது.

-ஆசிரியர் குழு



படிப்பகம்

www.padippakam.com

# ஆர்த்தெழுந்தது த. பெ. க. !
# அழிக்கப்பட்டது ஆபாச 'திரைப்படச்சுருள் ! !
# அலறியது ஆபாச திரையரங்குகள் ! ! !

அன்பார்ந்த வாசகர்களே!

இன்று திரைப்படத்துறை என்பது மிகவும் புகழ் வாய்ந்ததாகவும், விஞ்ஞான முன்னேற்றத்தின் அதிசயங்களில் ஒன்றாகவும், மக்கள் அனைவருக்கும் மிகப் பெரிய பொழுதுபோக்கு சாதனமாகவும் அமைந்துள்ளது! திரைப்படம் இல்லையேல் மனித வாழ்வு இல்லை என்று உணரும் அளவிற்கு திரைப்படத்துறை மக்கள் மனதில் இடம் பெற்றுள்ளது! இந்த திரைப்படத் துறையினால் மனித சமூகத்திற்கு என்ன பலன்?

இப்படிப்பட்ட விஞ்ஞான வளர்ச்சியெல்லாம் நம் போன்ற உழைக்கும் மக்களுக்கு பயன்படுவதில்லை! மாறாக முதலாளிகளின் வளர்ச்சிக்காகவும், மேலை நாட்டு கலாச்சாரங்களையும், பண்பாட்டையும் திணிப்பதற்கு மட்டுமே பயன்படுகின்றன! மேலும் இன்று வெளியிடப்படும் திரைப்படங்கள் அனைத்தும் நாகரீகம் என்ற பெயரில் மனித சமூகத்தை எங்கோ இழுத்து செல்கிறது. இந்திய மண்ணையே சீரழித்துக் கொண்டுள்ளது!

இந்தச் சீரழிவைத் தடுக்கும் வகையில் தந்தை பெரியார் காணத் துடித்த புரட்சிகர பெண்களாய் பாரதி கண்ட புதுமைப் பெண்களாய் புறப்பட்டோம்! புது யுகத்தை படைத்திடவேண்டும் என்ற எண்ணத்தில் புரட்சிகர வேலையைத் தொடங்கினோம்! அனைத்து இடங்களிலும் (கிராமங்கள், நகரங்கள்) 'ஆபாச எதிர்ப்பு இயக்கம்' என்ற பேனரில் தொடர் பிரச்சாரம் (நோட்டீஸ், போஸ்டர், தெருமுனைப் பிரச்சாரம்) செய்யப்பட்டது! பெண் உரிமையை பறைசாற்றும் வகையில் 'ஆணுக்குப் பெண் இளைப்பில்லை' என்பதை ஆணாதிக்கம் மிகுந்த இந்த சமூகத்திற்கு உணர்த்தும் வகையில் மதுரையில் 5-8-95ல் முதல் மாநில மாநாடு நடைப்பெற்றது! இம் மாநாட்டில் ''பெண்களை ஆபாசமாக சித்தரிப்பவர்கள் மீது த. பெ. க. நேரடி நடவடிக்கை எடுக்கும்'' என்ற முக்கிய தீர்மானத்தையும், இன்னும் பல தீர்மானங்களையும் நிறைவேற்றியது. சொன்னதை செய்வதுதான்



படிப்பகம்

www.padippakam.com

த.பெ.க. வின் இலட்சியம்! அந்த இலட்சியத்தை நிறைவேற்றும் வகையில் 10-10-95 அன்று காலை 11-00 மணியளவில் சென்னை மௌண்ட் ரோட்டை நோக்கிப் புறப்பட்டது போராட்டப் புயல்! ஆம்! 21 பெண்களையே கொண்ட போராட்டப் புயல்! ஆண்-பெண் உறவுகளை கொச்சைப் படுத்தக் கூடிய பாலியல் உணர்வுகளை தூண்டக் கூடிய ஆபாச புத்தகங்களை பறிமுதல் செய்து நடுவீதியில் வைத்து கொளுத்தியது!

அடுத்த கட்டமாக மதுரையில் சிம்மக்கல் அருகே உள்ள தீபா, ரூபா தியேட்டரினுள் சென்றோம்! இதுவரை பெண்கள் உள்ளே வந்ததே கிடையாது என்ற நிலையில் இருந்த தீபா, ரூபா எங்களது விண்ணையே பிளந்து சென்ற உணர்வுபூர்வமான முழக்கங்களை கண்டு திகைத்து நின்றது! 20 பெண்கள் முழக்கங்களுடன் பிலிமை பறிமுதல் செய்ய வேண்டும் என்ற உத்வேகத்துடன் உள்ளே நுழைந்து, தியேட்டரின் திரையை கிழித்தோம்! அதன் பின்பு பெண்களை நிர்வாணமாக வைத்திருக்கும் கண்ணாடிக்கூண்டினுள் உள்ள ஸ்டில்லை உடைத்து கைப்பற்றினோம்! தியேட்டர் மானேஜரும், ஒரு சில ரௌடிகளும் வந்து தடுக்கப் பார்த்தனர்! அவர்களையும் அடித்து, ஓட, ஓட, விரட்டினோம்! அதன் பின்பு பிலிம் ரோல் வைத்திருக்கும் அறைக் கதவை உடைத்து உள்ளே இருக்கும் பிலிம் ரோலை தூக்கி கொண்டு வெளியில் வந்தோம். அப்பொழுது எங்களை உள்ளே விட்டு தியேட்டரின் வெளியே உள்ள கதவை பூட்டுவதற்கு முற்பட்டனர். அவர்களையும் அடித்து தள்ளிவிட்டு வந்து சிம்மக்கல் ரவுண்டானா முன்பு பிலிம் ரோலை போட்டு எரித்தோம். எரிந்து கொண்டிருக்கும்போது மிகப்பெரிய அளவில் ஒரு பெண்ணின் நிர்வாண கட் அவுட் வைக்கப்பட்டிருந்தது! இரண்டு பெண்கள் மேலே ஏறி கட் அவுட்டை அறுத்து கீழே இழுத்துப் போட்டு எரித்தோம்! இது வரை சர்க்கஸ் கூட்டத்தையும் பாம்பாட்டி மகுடி ஊதும் வித்தையையும், சண்டை கூட்டத்தையுமே பார்த்த நம் மக்களுக்கு இந்த கூட்டமானது ஒரு வித்தியாசமான உணர்வை ஏற்படுத்தியது! அக் கூட்டத்தின் நடுவே புளு பிலிம் எரிந்து கொண்டிருந்த போது எங்களது போராட்ட கனலும் தீ சுவாலையைப் போல் பற்றி எரிந்தது! 'கொளுத்துவோம்! கொளுத்துவோம்! ஆபாச திரைப்படங்களை கொளுத்துவோம்!' என உணர்வு பூர்வமாக முழக்கமிட்டோம். இதை பார்த்துக்கொண்டிருந்த மக்கள் கூட்டத்தில் உள்ள பேருந்து ஓட்டுனர் தனது பேருந்தில் உள்ள டீசல் பெட்டியை திறந்து டீசலை எடுத்து



படிப்பகம்

www.padippakam.com

பிலிம் ரோல்மீது, ஊற்றினார். இந்தப் போராட்ட தீயானது இந்திய மண்ணையே மாற்றவேண்டும் என்ற எண்ணத்தில் அடுத்ததாக சாலை மறியலில் ஈடுபட்டோம்! அப்பொழுது மக்களிடையே துண்டு பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டது! குப்பையில் கிடந்த துண்டு பிரசுரங்களைக் கூட மக்கள் தேடி கண்டுபிடித்து படித்தனர்! அந்த அளவிற்கு போராட்டமானது மக்களை சிந்திக்கவும் போராட்ட உணர்வினைத் தூண்டவும் செய்தது!

அதன் பின்னர் ஏறக்குறைய 1½ மணி நேரம் கழித்து காவல் துறையினர் வந்தனர்! உடனே வண்டியில் ஏறுமாறு உத்தரவிட்டனர்! ஆனால், நாங்கள் கலெக்டர், கமிஷனர் வந்து எங்கள் கோரிக்கையை ஏற்று, மக்கள் முன்பு "ஆபாசத் திரைப்படங்களை அனுமதிக்கமாட்டோம்" என்று வாக்குறுதி கொடுக்காவிட்டால் நாங்கள் அரெஸ்ட் ஆவதில்லை என்று கூறினோம்.' (ஏனெனில் ஆபாச திரைப்படங்கள், பத்திரிக்கைகள் இவர்களுக்கு தெரியாமல் வெளியிட வாய்ப்பில்லை) பின்பு பெண் காவல் துறையினரை வரவழைத்து, வற்புறுத்தி வண்டியில் ஏற்றி மகளிர் காவல் நிலையத்திற்கு கொண்டு சென்றனர். அங்கு உதவி ஆணையாளர் போராட்டத்தில் கலந்துகொண்டவர்களை அழைத்து 15 நாள் ரிமாண்ட் பண்ணுவோம் என்று கூறி மிரட்டினார். ஆனாலும் நாங்கள் அடிபணிவதாக இல்லை! அக்கினிக்குஞ்சுகளை வைக்கோலுக்குள் வைத்து மூட நினைத்தால், வைக்கோல்தானே எரியும்! அதுபோலத்தான் உன்னால் முடிந்ததைப்பார்! நீ தான் தோற்றுப் போவாய் என்று கூறிவிட்டு அங்கும் சாப்பாடு வசதி கோரி போராட்டத்தை தொடர்ந்தோம்! எங்கள் மீது என்ன வழக்கு போட்டு ரிமாண்ட் செய்வது என்று புரியாமல் அன்று மாலைவரை திணறிக் கொண்டிருந்தது 'மக்களுக்காக' செயல்படும் காவல் துறை. பிறகு திரையரங்கு மானேஜரின் கெடுபிடி தாங்காமல், திரையை கிழித்தல், ஆபாச பிலிம் சுருளை எரித்தல், ஸ்டில் வைக்கப்பட்ட கண்ணாடியை உடைத்தல் என்று எங்கள் மீது வழக்கு போடாமல் சட்ட விரோதமாக கூடுதல், தகராறு செய்தல், அத்துமீறி நுழைதல், பொருட்களுக்கு சேதம் ஏற்படுத்துதல், அடித்து காயம் ஏற்படுத்துதல் ஆகிய பிரிவின் கீழ் எங்களை கைது செய்து பொய் வழக்கு போட்டனர். அன்று மாலை 6 மணிக்கு மேல் மாஜிஸ்திரேட்டிடம் அழைத்துச் செல்வதாக கூறி கோர்ட்டிற்கும், மாஜிஸ்திரேட் வீட்டிற்கும் அலைக்கழிக்க வைத்து, திரும்பவும் காவல் நிலையத்திற்கே அழைத்து சென்று இரவு அங்கு வைத்திருந்து, அடுத்த நாளே எங்களை நீதிமன்றத்திற்கு கொண்டு சென்றனர்! அங்



படிப்பகம்

www.padippakam.com

கும் மக்கள் கூட்டம் எங்களை காண அலை மோதியது. உணர்வு பூர்வமான முழக்கங்களினாலும், பேச்சினாலும் எங்களது கருத்துக்களை மக்கள் முன் வைத்தோம்! உற்சாகமாக கைதட்டி தங்கள் ஆதரவுகளை அளித்தனர். எங்களுக்காக வாதாட G. K. கோபாலன் தலைமையில் 11 வக்கீல்கள் ஆஜராகி சொந்த ஜாமினில் விட்டனர். பின்பு நீதிமன்றத்திற்கு வெளியில் முழக்கமிட்டவாறு பிரச்சாரம் செய்துவிட்டு போராட்ட வீராங்கனைகளாய் வெளியில் வந்தோம்.

போராட்டத்திற்கு பின்பு நெற்றிக் கண், வார மலர் போன்ற பத்திரிக்கைகளில் பேட்டிகளும் மற்ற பத்திரிக்கைகள் அனைத்துமே இன்று வரை இந்த போராட்டத்தை பற்றியே பேசிக்கொண்டிருக்கின்றன! பாரதிராஜா, மீனா போன்றவர்கள் கூட இப்போராட்டத்தை பாராட்டும் நிலை ஏற்பட்டுள்ளது. 'துக்ளக்' பத்திரிக்கையில் வக்கீல் சுமதி வெளியிட்ட கட்டுரையும் (இதுவும் ஒரு சுதேசிப் போர்) மக்களிடையே பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. முதலாளித்துவ சிந்தனையாளர்கள் தங்களுக்கு சாவு மணி அடிக்கப்படுகிறதே என நினைத்து கதிகலங்கி உள்ளனர்.

எனினும் ஒரு சில வாய்ச் சொல் வீரர்கள் "உங்களால் ஆபாசத்தை ஒழிக்க முடியாது! இந்த சமூகத்தை மாற்றவும் முடியாது"! என்று கூறுகின்றனர். உண்மைதான்! காலம் காலமாக ஊறிய குட்டையை சுத்தப்படுத்துவது மிக மிக கடினம்தான்! நாங்கள் ஏதோ 20 பெண்கள் போய் ஒரு தியேட்டரில் உள்ள ஆபாச படச் சுருளை எரித்த உடன் 'ஆபாசம்' என்பது ஒழிந்து விடும்! இந்த சமூகம் மாறிவிடும் என்று கூறவில்லை! ஆபாசத்தை எதிர்ப்பதற்கு ஒரு வழிகாட்டியாகத்தான் அமைந்துள்ளோம்! ஆங்காங்கே மக்கள் ஒன்று திரண்டு போராட வேண்டும் என்பதே எங்கள் நோக்கம்.

"பெண்கள்தானே பெரும்பாலும் ஆபாசமாக நடிக்கிறார்கள்! அவர்களை முதலில் திருத்த வேண்டியதுதானே" இது பெரும்பான்மையான மக்களிடம் எழும் கேள்வியாக உள்ளது! உண்மைதான்! கதாநாயகி மட்டும் கைக்குட்டை அளவில் உடை உடுத்திக் கொண்டும், கதாநாயகன் உடல் முழுவதையும் மறைத்துக் கொண்டும் வருவதாகத்தான் திரைப்படங்கள் காட்டுகின்றன. அப்படிப் பெண்களை நடிக்கத் தூண்டுவது தயாரிப்பாளர்களே! இன்று நடைபெறும சினி - மார்க்கெட்டில் கவர்ச்சி



படிப்பகம்

www.padippakam.com

என்பதை வைத்தே சினி - பீல்டில் நம்பர் ஒன்னாகத் தேர்வு செய்கின்றனர், மேலும் மக்கள் ஒரு போதும் ஆபாசமான படங்கள் திரையிடப்பட வேண்டும் என்று கேட்டதில்லை! மிகப் பெரிய பட அதிபர்களும், தயாரிப்பாளர்களுமே மக்களது சிந்தனையை திசை திருப்பும் நோக்கத்தில் தேனில் கலந்த விஷமாக ஆபாசத்தை திணித்துக் கொண்டுள்ளனர்.

மேலும் மூன்றாம் உலக நாடுகளில் தங்களின் இலாப வேட்டைக்காகவும், சந்தையில் நடைபெறும் போட்டியில் முதல் இடத்தைப் பெறுவதற்காகவும் மக்கள் தொடர்பு சாதனங்களின் மூலம் ஏகாதிபத்தியங்கள் உள்ளே நுழைகின்றன. மக்கள் தொடர்பு சாதனங்களான ரேடியோ, தொலைக்காட்சி, பத்திரிக்கைகள் இவற்றின் மூலம் மக்களை கவர வேண்டும், மக்களை கவர வேண்டுமானால் இன்று கவர்ச்சிப் பொருளாய், போகப் பொருளாய் இருக்கக்கூடிய பெண்ணினத்தை பயன்படுத்துவது தான் வழி! எனவே தொலைக் காட்சி முதல் திரைப்படம் வரை பெண்களை சம்பந்தமில்லாத பொருளுக்கும், சம்பந்தமில்லாத காட்சிகளிலும் நடிக்க வைத்துக் கொண்டுள்ளனர். தொலைக் காட்சியில் 50 விளம்பரங்கள் காட்டப்படுமானால் அதில் 45 விளம்பரங்களில் பெண்களே வருகின்றனர். திரைப்படங்களில் 'கதாநாயகி' பாத்திரம் என்பதே மிக குறுகிய வட்டத்துக்குள்ளாகி, ஒரு கிளுகிளுப்பை ஊட்ட வேண்டும் என்பதற்காக மட்டுமே கதாநாயகிகளை பயன்படுத்துகின்றனர்.

இதனால், பெண்கள் மட்டுமல்ல, ஒட்டுமொத்த சமூகமே சீரழிவிற்குள் தள்ளப்பட்டுள்ளது! இதனை உணர்ந்து அனைவரும் இதைப் போன்ற போராட்டங்களில் ஈடுபட வேண்டும். நம்மை நாமே அறியாத வகையில் ஏமாந்து கொண்டிருக்கிறோம். நம் நாடே அந்நிய நாட்டிடம் தலை வணங்கிக் கொண்டு அந்நிய நாட்டின் கட்டளைகளுக்கு அடிப்பணிந்து கொண்டுள்ளது! அதன் விளைவுதான் தனியார் மயம், புதிய பொருளாதாரக் கொள்கை. இன்னும் பல புதிய திட்டங்களை ஒவ்வொரு நாளும் அறிமுகப்படுத்திக் கொண்டுள்ளது! இவ்வளவு பிரச்சனைகளையும் மக்கள் கண்டுகொள்ளாமல், ஏகாதிபத்தியங்களை எதிர்த்து குரல் கொடுக்காமல் இருக்க வேண்டுமானால் ஒரே வழி! சிந்தனையை திசை திருப்புதல். ஆம்! புதிய புதிய சீரழிவு கலாச்சாரங்களையும் அநாகரிகங்களை பரப்புவதும், வாழ்க்கை முழுவதும் டேக்கிட் ஈஸி என்ற கற்பனையை வளர்ப்பதும், அழகிப்



படிப்பகம்

www.padippakam.com

போட்டி நடத்துவதும், அழகிப் போட்டிக்கு திட்டமிட்டே இந்திய பெண்களை தேர்ந்தெடுப்பதும், ஏகாதிபத்தியத்திகு விசுவாசமாக உழைக்கும் வகையில் பிரபுதேவாவை குட்டி மைக்கேல் ஜாக்சனாக புகழ்வதும் இந்திய மக்களை சவக்குழியில் தள்ளுவதற்கே!

இதனை உணர்ந்து ஆண்-பெண் இருவரும் உடலாலும், மனதளவிலும் பால்வேறுபாடு இல்லாமல் உனக்கு நான் அடிமை, எனக்கு நீ அடிமை என்று சொல்லக் கூடிய அடிமை பேதத்தை தூக்கியெறிந்து, மனிதர்களாய் திட்டமிட்டே இந்திய அரசு நடத்தும் போலி நாடகத்தை, உழைக்கும் மக்களுக்கு அம்பலப் படுத்தி, வர்க்க விடுதலையைப் படைக்க புறப்படும் போராட் வீரர்களாய் புறப்படுவோம்! மக்கள் படை திரண்டால் என்ன ஆகும் என்பதை அநேக போராட்ட வரலாறுகள் நிரூபித்துள்ளன. வரலாறு படைக்க புறப்பட்டிருக்கும், புதிய ஜனநாயக புரட்சியை வென்றெடுக்க முன்னெடுத்து செல்லும் த.பெ.க வுடன் இணைந்து சமூகத்தை மாற்றக் கூடிய போராட்ட படைகளாய், அக்கினிக் குஞ்சுகளாய் மாறுவோம்! போராட்டத்தின மூலம் ஆபாசத்தை அழிப்போம்! ஏகாதிபத்தியத்தை அடியோடு விரட்டுவோம்! வெற்றி வெகு தொலைவில் இல்லை.

**- மேரி**

○ ● ○

○ ~~இச்சையின் வடிவம் பெண்;~~

○ இந்த உலகைத் தாங்கி வழி நடத்துபவள் பெண்;

○ ஆணுக்கு பெண் அடிமை அல்ல;

○ அலங்காரப் பதுமையும் அல்ல.



படிப்பகம்

www.padippakam.com

# சிராய்ப்புக்கள்

★ பூட்டிய சங்கிலிகள்
முறிபட்டபோது
சிராய்ப்புகள்...
உடலிலும் உள்ளத்திலும்.

★ விரிசல்கள் சிறிதாயினும்
அலட்சியப் படுத்தும்
ஆணவப் போக்கு –
புரையோடிய கண்களுக்கு;

★ இரத்தம் சிந்திய
உழைப்பு
அவ்வப்போது...
சிறைபிடிக்கப்பட்டது;

★ முறிபட மறுக்கும்
சங்கிலிகளும்
தொடரும் எம்
சம்மட்டி அடிகளும்...
நீண்ட பயணமாய்;

★ எமது
மூச்சின் வெப்பமும்
அடிகளின் சப்தமும்
பாராமுகமாய்...
ஆதிக்க கூட்டம்;

★ தூக்கிப் பிடித்த கைகளில்
உடைபட்ட சங்கிலியும்
சூடேறிய சம்மட்டியும்...

★ நாடி வந்து
நலம் விசாரிப்புகளும்
முகம் கிழிந்த
அறிக்கை வாசிகளும்...

★ எமது
உடைப்புகளுக்கும்
எரிப்புகளுக்கும்...
அர்த்தம் புரிந்தவர்களாய்;

★ இலக்கை நோக்கி
தொடரும்...
எமது போராட்டம்.

---

தீ. நிரஞ்சனா



படிப்பகம்

www.padippakam.com

# முதலாளியின் சுரண்டலுக்கு எதிராக கோரமண்டல் தொழிலாளர் போராட்டம்

ஐரோப்பிய நாடுகளின் பருத்தி துணி தேவையை ஒட்டு மொத்தமாக பூர்த்தி செய்வது தமிழகத்தின் தலைநகரமாம் சென்னையும் அதன் சுற்று புறங்களுமாகும். எக்ஸ்போர்ட் என்றாலே கார்மெண்ட்ஸ்கள் என்று அர்த்தம் கொள்ளும் அளவிற்கு பெருகி இருக்கும் இத்தொழிற் சாலைகளில் 50,000க்கும் மேற்பட்டோர் பணி புரிகின்றனர். இதில் 90% பெண் தொழிலாளர்களே என்பது குறிப்பிடத் தக்கது. ஆனால் இத் தொழிலாளர்களுக்கு உற்பத்திக்கேற்ற சம்பளமோ, போனஸோ கிடையவே கிடையாது. ஆயிரம் கனவுகளை காட்டி வேலைக்கு அழைப்பதே இந் நிறுவனங்களின் வாடிக்கை.

பெண் என்றால் தங்களுடைய நலனுக்காக போராட மாட்டார்கள். காலங்காலமாக அடிமைப்பட்டு வரும் பெண்ணினம் எத்தகைய தாக்குதலையும் ஏற்றுக் கொள்ளும் என்கின்ற நம்பிக்கையே கார்மெண்ட்ஸ் முதலாளிகளுக்கு பிரதான மூலதனமாகும். மேற் சொன்ன இந்த நம்பிக்கையை தகர்த்தெறியும் விதமாக 'கோரமண்டல் கார்மெண்ட்ஸ்' தொழிலாளர்கள் அதி தீவிர போராட்டத்தை மேற்கொண்டுள்ளனர்.

இந்தியாவின் மிகப் பெரிய சுரண்டல்காரனான டாடாவின் 'கோரமண்டல் கார்மெண்ட்ஸ்' 2000க்கும் மேற்பட்ட தொழிலாளர்களைக் கொண்டது. இந்நிறுவனம் கடந்த 27 ஆண்டு காலமாக தொழிலாளர்களின சம்பளம், போனஸ், போன்றவற்றை ஏப்பம் விட்டு வந்துள்ளது 1993-ஆம் ஆண்டு 20% போனஸ் அறிவித்து அதில் 6.5%. அட்வான்ஸ் தொகை என பிடித்து விட்டது. 1994ல் அதே 20%. போனஸ் அறிவித்து விட்டு 11.67%. அட்வான்ஸாக பிடித்தது. 95ம் ஆண்டுக்கான போனஸ் அறிவிக்கப்படவே இல்லை. எத்தனை ஆண்டுகள் பணி புரிந்தாலும், எத்தகைய பொறுப்பிலிருந்தாலும் சம்பளம் 1000 ரூபாய்க்கு குறைவே. ஊதியம் உயர்வு வருடத்திற்கு ரூ. 15 மட்டுமே. வேலை நிரந்தரம் என்பது குதிரைக் கொம்பே! அப்படியே ஒன்றிரண்டு பேரை நிரந்தரம் செய்து விட்டாலும் கடந்த கால சர்வீஸ்கள் கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட மாட்டாது. பருத்தி துகள்களினாலும், மெல்லிய நூலிழைகளினாலும் ஆஸ்மா, காச நோய் போன்றவைகளே தொழிலாளர்களுக்கு நிரந்தர ஊதியம் !

இந்த நிலையில்தான் தொழிலாளர்கள் கால வரையற்ற வேலை நிறுத்த போராட்டத்தை துவங்கியுள்ளனர். 20 சதவிகித போனஸ், சம்பள உயர்வு, உழைப்புக்கேற்ற ஊதியம்,



படிப்பகம்

www.padippakam.com

பணி நிரந்தரம், தொழில் பாதுகாப்பு போன்ற கோரிக்கைகளை முன் வைத்து இப்போராட்டத்தில் இறங்கியுள்ளனர். இதில் 75 சதவிகித பெண்கள் பங்கேற்பது சிறப்பு அம்சமாகும்.

கோடானுகோடி தொழிலாளர்களின் இரத்தத்தை உறிஞ்சி குடித்து உல்லாசபுரியில் வாழ்ந்து வரும் முதலாளிகளின் செவிப் பறையை கிழிக்கும் விதமாய் இப்போராட்டம் உச்சக் கட்டத்தை நோக்கி சென்று கொண்டிருக்கிறது. செவி சிவந்த சீமான்கள் போராட்டத்தை நசுக்க கருங்காலிகள் கொண்ட போட்டி சங்கத்தை ஏற்படுத்தி பிரித்தாளும் வேலையை செய்வதோடு மட்டுமில்லாமல் காவல்துறையின் ரவுடிகளை கொண்டு காட்டுமிராண்டித் தனமான தாக்குதலையும் நடத்தியுள்ளனர். இதனால் தங்கள் போராட்டத்திற்கு ஆதரவு கோரி லாரி தொழிலாளர்களுடன் பேச்சு வார்த்தை நடத்திய சமயத்தில் கருங்காலிகளும், போலீசும், திடீர் தாக்குதல் நடத்தியது மட்டுமல்லாமல் தொழிலாளர்கள் மீது பொய் வழக்குகளையும் தொடுத்துள்ளது. ஆனால் தொழிலாளர்களோ 'உச்சிமீது வானிடிந்து விழுகின்ற போதிலும், அச்சமில்லை! அச்சமில்லை! அச்சமென்பதில்லையே என்கின்ற உணர்வோடு போராட்டம் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

இந்தியாவிலுள்ள தொழிலாளர்களின் கோமணத் துணியைக் கூட விட்டு வைக்க மனமில்லாத நரசிம்மராவின் 'புதிய பொருளாதாரக் கொள்கை' டாடா முதலாளிகளின் 'கொள்ளை கொள்கை' எரிகின்ற தீயில் எண்ணெய் வார்க்கின்றது. பணி நிரந்தரம் செய்யாமல் எவ்வளவு காலமும் வேலையில் வைத்திருக்கலாம், ஆண்டான்-அடிமைப் போல் எந்த தொழிலாளியையும் காரணமின்றி வேலையிலிருந்து நிறுத்தலாம் போன்ற தொழிலாளர் நலச் சட்டங்களை காலில் போட்டு மிதிக்க வேண்டும். நிர்ணயிக்கப்பட்ட சம்பளம், ஈ.எஸ்.ஐ, போனஸ், பி.எப்., எதுவுமின்றி கேசியல் லேபராக வைத்திருக்கலாம் என்பது போன்ற கவர்ச்சிகரமான கொள்கையினால் நாடு 'முன்னேறி' வருகின்றது என்று கூவுகின்றது. ஆளும் வர்க்கக் கும்பல். இந்தக் கொள்கைகளை எதிர்ப்போரை என்.எஸ்.ஏ., தடா போன்ற சட்டங்களின் மூலம் கேட்கக் கூட நாதியற்றவர்களாக்கி வருகின்றது.

இது போன்ற கொள்கைகளைத் தான் 'கோரமண்டல் நிர்வாகம்' தனது தொழிலாளர்கள் மீது திணிக்க முனைகிறது. உரிமைகள் கேட்டு கேட்டு ஓய்ந்துப் போன கோரமண்டல் தொழிலாளர்கள் தங்களுடைய உரிமைகளை தட்டிப் பறிக்க முனைந்து விட்டனர். போராட்டத்தால் தான் நீதி கிடைக்கும்; நியாயமான போராட்டங்களால்தான் தொழிலாளர்களுக்கு வெற்றி கிட்டும் என்பதை உணர்ந்து போராட்ட களததில் இறங்கி உள்ளனர்.

'வெல்க கோரமண்டல் தொழிலாளர் போராட்டம்'

**வீ.பா.**



படிப்பகம்

www.padippakam.com

# ஆபாச திரைப்படங்களுக்கு கையூட்டு பெறும் சென்சார் போர்டின் மீது

## பெண்ணுரிமைக் கழகம் வழக்குத் தொடர முடிவு

ஆபாசத்தை கண்டித்து நகர்புறங்களிலும் கிராமப் புறங்களிலும் கல்லூரிகளிலும், விடுதிகளிலும் கலை நிகழ்ச்சி மூலம் விழிப்புணர்வை ஏற்படுத்தினோம்.

அடுத்த கட்டமாக ஆபாசத்தைக் கண்டித்து அரசே நடவடிக்கை எடுக்கக் கோரி மாவட்ட ஆட்சியாளர், தியேட்டர் அதிகாரிகளுக்கு கடிதம் அனுப்பப்பட்டது. எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாததால் தமிழ்நாடு பெண்ணுரிமைக் கழகம் ஆபாசத்தை தடை செய்கிறது. அதை மீறி செயல்படுபவர்கள் மீது நேரடி நடவடிக்கை எடுக்கப்படும் என 5-8-'95 அன்று நடந்த முதல் மாநில மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அதன்படி ஆபாச புத்தகங்கள் வெளிவருவதைக் கண்டித்து 10-10-'95 அன்று சென்னையில் அண்ணாசாலையில் தெரு ஓரங்களில் விற்றுக் கொண்டிருந்த ஆபாச புத்தகங்களை பறிமுதல் செய்து நடுரோட்டில் எரித்து சாலை மறியல் செய்தோம். அடுத்த கட்டமாக மதுரையில் ரூபா, தீபா தியேட்டரில் வெளியிடும் ஆபாசப் படத்தைக் கண்டித்து தியேட்டருக்குள் நுழைந்து திரையைக் கிழித்து, ஆபரேட்டர் அறைக்குள் நுழைந்து கருவிகளை பறிமுதல் செய்து சிம்மக்கல் ரவுண்டானாவில் போட்டு எரித்து சாலை மறியல் செய்தோம்.

இந்த போராட்டங்கள் வெற்றி பெற ஒத்துழைத்த அனைத்து பொதுமக்களுக்கும், பெண்களுக்கும், எமது வழக்கில் ஆஜராகி வாதாடிய வழக்கறிஞர்களுக்கும், போராட்டச் செய்தி தமிழகமெங்கும் மூலை முடுக்கெல்லாம் பரவ உதவிய பத்திரிகையாளர்களுக்கும் எங்கள் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

மேலும் இந்த ஆபாச எதிர்ப்பு இயக்கத்தைத் தொடர்ந்து எடுத்து செய்வதென 28-1-'96 அன்று கூடிய மாநிலக் குழுவில் தீர்மானிக்கப்பட்டது.

### இக்கூட்டத்தில் கீழ்கண்ட தீர்மானங்கள் எடுக்கப்பட்டன:

○ ஆபாச எதிர்ப்பு இயக்கத்தை பரந்துபட்ட அளவில் அணி திரட்டும் நோக்கத்தில் மாவட்ட, வட்டார மட்டங்களில்



படிப்பகம்

www.padippakam.com

தொடர்ந்து எடுத்துச் செல்ல முடிவு செய்யப்பட்டுள்ளது. ஆபாசத்தை எதிர்க்கும் நோக்கத்தை கொண்டுள்ள பெண்கள் அமைப்புகளும், கலை-இலக்கிய மற்றும் பண்பாட்டு அமைப்புகளுடனும் இணைந்து இக்கூட்டமைப்பை ஏற்படுத்துவதென முடிவு செய்யப்பட்டுள்ளது.

○ ஆபாசப் பத்திரிகைகள் மற்றும் ஆபாச திரைப்படங்கள் வெளிவருவதை நிறுத்தக்கோரி, சம்பந்தப்பட்ட துறைகளை சார்ந்த தலைமை சங்கங்களுக்கு எச்சரிக்கை கடிதம் அனுப்புவதாக முடிவு செய்யப்பட்டுள்ளதுது.

○ ஆபாச பத்திரிகைகளுக்கு பதிவு எண் அனுமதி தரும் பதிவு அலுவலக அதிகாரி மீதும், ஆபாச பத்திரிகைகளும், ஆபாச திரைப்படங்களும் தமிழக மக்களை சீரழிப்பதை கண்டும் காணாதது போல் இருக்கும் தமிழக அரசு (முதலமைச்சர்) மற்றும் காவல் துறை தலைமை அதிகாரி மீதும் வழக்குப் பதிவு செய்வதென முடிவு செய்யப்பட்டது.

மேற்கண்ட தீர்மானங்களை நடைமுறைப் படுத்தும் பொழுது வரும் அனைத்து தடைகளையும் முறியடித்து உறுதியுடன் எடுத்துச் செல்லவும், தமிழக மண்ணிலிருந்து பெண்களை இழிவு படுத்தும் ஆபாசப் பண்பாட்டை துடைத்தெறிந்து பெண்களை மதிக்கும் ஜனநாயக பண்பாட்டை படைத்திட தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மக்களையும் குறிப்பாக பெண்களையும் இந்த ஆபாச எதிர்ப்பு இயக்கத்தில் பங்கேற்குமாறு தமிழ்நாடு பெண் உரிமை கழக மாநிலக்குழு கேட்டுக் கொள்கிறது.

**த. பெ. க.**
**மாநிலக் குழு**

அன்பார்ந்த நண்பர்களே !

'பெண் உரிமை' பத்திரிக்கையின் புதிய தொடர்பு முகவரி :

**37/33, இராணி அண்ணாநகர்,**
**கே. கே. நகர்,**
**சென்னை-600 078**

என்ற முகவரிக்கு மாற்றப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

...ஆசிரியர் குழு



படிப்பகம்

www.padippakam.com

# கல்லுடைக்கும் பெண் தொழிலாளர் போராட்டம்

ஆண்டாண்டு காலமாக குடும்பம் குடும்பமாக கற்களை உடைத்து வாழ்க்கை நடத்தி வரும் திரிசூலம் கல்லுடைக்கும் தொழிலாளர்கள் இன்று முதலாளிகளின் சுரண்டலை எதிர்த்து உழைப்புக்கேற்ற கூலி கேட்டு போராட தொடங்கி விட்டனர்.

காலை 6.00 மணி முதல் மாலை 6 00 மணி வரை கல்லை உடைத்தே தேய்ந்துப் போயுள்ள தொழிலாளர்களைப் பற்றியே சிறிதும் கவலையற்ற முதலாளிகள் கூட்டம் எப்படி எல்லாம் தொழிலாளர்களின் உழைப்பை சுரண்டி வந்துள்ளது தெரியுமா?

காலையில் 6.00 மணிக்கு கல்லுடைக்கச் செல்லும் தொழிலாளர்கள் முதலில் வெடிமருந்து வைத்து மலைகளைக் குடைந்து மலைக்குள் செல்ல வேண்டும். மலைக்குள் இறங்கி ஆண் தொழிலாளர்கள் மலையைக் குடைந்து பெரிய கற்களாக உடைத்து தருவார்கள். பெண் தொழிலாளர்கள் அந்தக் கற்களை தலையில் சுமந்து வெளியில் கொண்டு வந்து போட வேண்டும். அவ்வாறு போட்ட கற்களை மதியம் பன்னிரண்டு மணிக்கு மேல், மேலும் சிறு சிறு கற்களாக உடைக்க வேண்டும். வேலை செய்யும் இடங்களில் குடிக்க தண்ணீரும் இல்லாமல் அவதிப்படுகின்றனர். இவ்வாறு கடினமாக வேலை செய்யும் ஆண்களுக்கும், பெண்களுக்கும் சேர்த்து முதலாளி கொடுத்த கூலியோ ரூ. 25தான். ஆனால் ஒவ்வொரு தொழிலாளியின் உழைப்பிலும் முதலாளி சம்பாதித்த இலாபமோ பல நூறு !

ஒரு புறம் முதலாளி சுரண்டலாலும்,மறுபுறம் ஆண் ஆதிக்க சமூகத்தாலும் ஒடுக்கப்படும் பெண் தொழிலாளர்கள் கல்லுடைத்து களைப்பாக வீடு திரும்பிய பின்னரும் மறுநாள் சாப்பிட வேண்டியவற்றை முன்தினமே சமைக்க வேண்டும். வெகுதூரம் சென்று குடிப்பதற்கு தண்ணீர் கொண்டு வரவேண்டும். இவ்வாறு ஓய்வே இல்லாமல் உழைத்து உழைத்து ஓட்டாண்டிகளாகி விட்டனர் இப்பெண் தொழிலாளர்கள் !

ஆனால் உழைப்பை சுரண்டியே பிழைப்பு நடத்தி வந்த மேஸ்திரிகள் சொசைட்டி இல்லாத காலக் கட்டங்களில் குரல் எழுப்பிய போதெல்லாம் கூலி உயர்த்தப்பட்டு தற்போது ரூ. 50 தரப்படுகிறது.



படிப்பகம்

www.padippakam.com

இப்பொழுது எல்லாம் நவீன கருவிகளை புகுத்தி சிறு கற்களை உடைப்பதால் பெண்களுக்கு வேலையே இல்லை. விலைவாசிக் கேற்ற கூலி கொடுக்கப்படாததால், முதலாளிகள் கொடுக்கும் சொற்ப கூலியை மட்டுமே வைத்து குடும்பம் நடத்த இயலாததால் பெண்கள் பெரிய கற்களை ஓர் அங்குலம் கல்லாக உடைக்கத் தயாராகினர். தற்போது ஆயிரத்திற்கும் மேற்பட்ட பெண்கள் இந்த ஓர் அங்குலம் கல் உடைக்கும் வேலை செய்து வருகின்றனர். இந்த கற்கள்தான் தமிழகம் முழுவதும் இரயில் தண்டவாளங்களுக்கு இடையே போடப்படுகிறது. கடினப்பட்டு ஓர் அங்குலம் கல் உடைக்கும் இந்தப் பெண் தொழிலாளர் களுக்குக் கூலி குறைவே!

இவ்வாறு பல்வேறு வகைகளில் கடினப்பட்டு வேலை செய்து கொண்டிருக்கையில் பல தொழிலாளர்கள் கல் பட்டு கண் இழந்துள்ளனர். கால் அடிப்பட்டுள்ளனர். நரம்பு பாதிக் கப்பட்டுள்ளது. கல் சுமைக்கையிலேயே பல பெண்கள் இறந்தும் உள்ளனர்.

மேலும் சுகாதாரமற்ற சூழ்நிலையில் வேலை செய்வதால் ஆஸ்துமா, டி, பி. போன்ற நோய்களுக்கும் ஆளாகி உள்ளனர்.

பல பெண்கள் கடினப்பட்டு கல் உடைப்பதால் கர்ப்பப்பை பாதிக்கப்பட்டு பெண்களுக்கு கர்பப்பைக் கூட எடுக்கப்பட்டு உள்ளது. பல கர்ப்பிணிப் பெண்கள் கல் உடைத்துக் கொண்டு இருக்கையில் இறந்து உள்ளனர்.

இவ்வாறு பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாக முதலாளி களின் சுரண்டலுக்கு பலியாகி மடிந்துக் கொண்டிருந்த இந்த கல்லுடைக்கும் தொழிலாளர்கள் இன்று விழித்துக் கொண்டனர். வர்க்க போராட்டத்தின் முதல் அடியாக திரிசூலம் பெண் தொழி லாளர்கள் போராடத் தொடங்கினர்.

## தொழிலாளர் வேலை நிறுத்தப் போராட்டம்

கடந்த 12.1.96 அன்று கூலி உயர்வு, உழைப்புக் கேற்ற கூலி மற்றும், சுகாதார வசதி கோரி திரிசூலம் கல்லுடைக்கும் தொழிலாளர்கள் வேலை நிறுத்த போராட்டம் செய்துள்ளனர்.

இரண்டாவது நாள் பெண் தொழிலாளர்கள் போராட்ட களத்தில் இறங்கி போராடத் தொடங்கினர்.



படிப்பகம்

www.padippakam.com

அதன் முதல் கட்டமாக உடைக்கப்பட்ட கற்களை ஏற்றி சென்ற லாரியை சக ஆண் தொழிலாளர்களுடன் இணைந்து மறித்தனர். கணக்குபிள்ளை ரசீது கொடுத்ததை தடுத்தனர்.

பெண்கள் போராட்டத்தில் இறங்கியதைக் கண்டு நடுங்கிய சொசைட்டி வேலை நிறுத்தத்தின் நான்காவது நாளன்று ரூ. 65 ஆக கூலி உயர்த்த ஒப்புக் கொண்டது. நாற்பதாண்டு கால ஒப்பந்தத்திலும் கையெழுத்து போட்டது.

இத்தனை நாட்களாக கொத்தடிமைகளாக இருந்த தொழிலாளர்கள் உரிமைக் கோரி போராடத் தொடங்கி விட்டனர். வர்க்க போராட்டத்தின் அடிச்சுவட்டை பதிய வைக்க ஆரம்பித்து உள்ளனர். அவர்கள் கூறுவதே,

மலைகளையே பிளந்திட்டோம்!

கற்களையே தூளாக்கிட்டோம்!

இரத்தத்தையே கலவையாக்கி !

சாலைகளையே போட்டோம்!

உழைப்பு யாருது?

செல்வம் யாருது?

காரணங்கள் அறிந்திட்டோம் !

தொடர்ச்சியான போராட்டம் நடத்துவோம் !

வெற்றி எமதே !

... **தேன்மொழி**

○ அன்பார்ந்த வாசகர்களே !

பொருளாதாரப் பிரச்சனையால் '**பெண் உரிமை**' மிகவும் தாமதமாக வெளி வந்துள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.



படிப்பகம்

www.padippakam.com

# த. பெ. க. வின் அமைப்புச் செய்திகள்

**சென்னை :**

பிப்ரவரி மாதத்தில் ''சர்வதேச உழைக்கும் பெண்கள் தின ஊர்வலம், பொதுக் கூட்டத்திற்கான நோட்டீஸ் விநியோகிக்கப் பட்டது. பிரச்சாரம் செய்யப்பட்டது.

மார்ச் 8-ந் தேதியை முன்னிட்டு 3000 துண்டு பிரசுரம் விநியோகிக்கப்பட்டது. 100 சுவரொட்டிகள் போடப்பட்டது. ஊர்வலமும் பொதுக் கூட்டமும் நடை பெற்றது. ஊர்வலத்தில் 85 பேர் கலந்துக் கொண்டனர். ஊர்வலம் 4-00 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு 6-00 மணிக்கு முடிவடைந்தது. 6-00 மணிக்கு கொடியேற்றப்பட்டு அதன் தொடர்ச்சியாக பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர் லட்சுமி தலைமைத் தாங்கினார். பத்மாவதி, ஜோதிராணி, தோழர் இன்குலாப் போன்றோர் சிறப்புப் பேச்சாளர்களாக கலந்துக் கொண்டனர்.

**மதுரை :**

மதுரை ஆபாசப் படச் சுருள் எரிப்புப் போராட்டத்திற்குப் பின்னும் தொடர்ச்சியான ஆபாச எதிர்ப்புப் பிரச்சாரம் பகுதிகளில் செய்யப்பட்டது.

'பெண் உரிமை' பத்திரிக்கை வெளி வருவதற்கான நன்கொடை பேருந்துகளில் வசூல் செய்யப்பட்டது.

மார்ச் 8-ஐ ஒட்டி 3000 துண்டுப் பிரசுரங்களும், 200 சுவரொட்டிகளும் போடப்பட்டன. பொதுக் கூட்டம் நடைபெற்றது. பொதுக்கூட்டத்தில் தோழர் ரீனா தலைமைத் தாங்கி நடத்தி வைத்தார். சிறப்புப் பேச்சாளராக தோழர் சந்திரா பேசினார்.

**தருமபுரி :**

மார்ச் 8-ஐ ஒட்டி 2000 துண்டுப் பிரசுரங்கள் போடப்பட்டது. கருத்தரங்கம் நடைபெற்றது.

**சேலம் :**

மார்ச் 8-ஐ ஒட்டி துண்டுப் பிரசுரங்கள் போடப்பட்டது. தெரு முனைப் பிரச்சாரம் செய்யப்பட்டது.

## சைதன்யா மஹிளா சமக்தா பெண்கள் அமைப்பின் மாநாடு

ஆந்திராவிலுள்ள பத்து பெண்கள் அமைப்புகள் இணைந்து 'சைதனயா மஹிளா சமக்தா' என்ற பெயரில் குண்டூரில கடந்த செப்டம்பர் மாதம் 24, 25 தேதிகளில் மாநாடு நடத்தினர். மாநாட்டை தொடர்ந்து ஊர்வலமும் பொதுக்கூட்டமும் நடத்தினர். ஊர்வலததில் 1000 பெண்கள் கலந்துக் கொண்டு ஊர்வலத்தை சிறப்பித்தனர். பொதுக் கூட்டததில் 4,000 பெண்கள் உணர்வு பூர்வமாகக் கலந்துக் கொண்டனர்.



படிப்பகம்

www.padippakam.com

# அடக்கு முறைக்கு எதிராக ஆர்த்தெழுந்த
# அக்னிப் பெண்கள்

இந்தியாவில் இருக்கும் தோல் தொழிற் சாலைகளில் கிட்டத்தட்ட 30 சதவிகித தொழிற்சாலைகள் வட ஆற்காடு மாவட்டத்தில்தான் உள்ளது. இதிலிருந்து வெளிப்படும் மோசமான நச்சுத்தன்மை வாய்ந்த கழிவினால் நிலத்தடி நீரும்,நிலமும் பாதிக்கப்பட்டு குடிப்பதற்குகூட தண்ணீர் இல்லாத நிலைதான் வேலூர், ஆம்பூர், வாணியம்பாடி பகுதியில் உள்ளது. மறுபுறமோ, இதில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு ஆஸ்துமா, புற்று நோய் (கான்சர்) பிற நோய்களும், விபத்துகளும் அதிகம். இதற்கு எந்த விதமான உதவியும் நிர்வாகங்கள் செய்வதில்லை. இதிலும் பெண்கள் என்றால் கொத்தடிமைகளின் நிலைதான்.

இந்த கொடுமைகளுக்கெல்லாம் ஐ எஸ்.ஐ. முத்திரைப் பெற்றதுதான் வேலூரை அடுத்த மேட்டூரில் உள்ள சேது ஷூ கம்பெனி (R. S. L.) என்னும் நிறுவனமாகும். 8 ஆண்டுகளுக்கு முன்பு தொடங்கப்பட்ட இந்நிறுவனம் இன்று 'ராம்கோ லெதர் குருப்' என்று 4 பிரிவுகளாக வளர்ந்துள்ளது. சென்னையில் உதயம் தியேட்டர், கோவையில் 2 ஜவுளி மில்கள் என்று கோடிக்கணக்கான சொத்துக்கு அதிபதியும் ஆளுங் கட்சியின் நிதி தாளாளருமான ராமசாமி செட்டியார் என்பவர்.

சேது ஷூ கம்பெனியில் மட்டும் 1000 தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள். இதில் 800 பேர் பெண்கள். இங்கு ஒரு நாளைக்கு 10 மணி நேர கடின உழைப்பு. ஆனால், கூலியோ 8 ரூபாயிலிருந்து 20 ரூபாய் வரைதான். முறையான கழிப்பறை வசதியோ பிற எந்தவிதமான வசதியும் கிடையாது. பெண்களை '**வாடிப் போடி**' என்று கேவலமாகத் திட்டுவது; **சமயம் கிடைத்தால் சீண்டி உரசுவது**, ஒருநாள் விடுப்பு எடுத்துவிட்டு மறுநாள் வேலைக்கு வந்தால் "**நேற்று எவன் கூட திரிந்தாய்?**" என்று நாகூசும் வார்த்தைகளில் அர்ச்சனை செய்வது, இந்தக் கீழ்த்தரமான செயல்களுக்கும் அராஜகத்திற்கும் தளபதி மேலாளர் சுகுமார்தான் நிர்வாகப் பொறுப்பு ஏற்றுக் கொண்டவர். இவ்வளவு கீழ்த்தரமான அதிகாரம் செய்வதற்கு காரணம், இவர் ராமசாமி செட்டியாருக்கு உறவினர் என்ற ஒரே காரணம்.



படிப்பகம்

www.padippakam.com

இந்த கொடுமைக்கு எதிராகவும், கூலி உயர்வு கோரியும், தங்கள் உரிமைக்காகவும் போராட, சென்ற 95 டிசம்பரில் தொழிற்சங்கம் தொடங்கினர். வீட்டு வாடகைக்கான படி, இன்னும் பிற கோரிக்கைகளை வைத்தும் 9-12-95 அன்று அடையாள வேலை நிறுத்தம் செய்தனர். வீட்டு வாடகை ரூ. 30 தருவதாக நிர்வாகம் ஒப்புக் கொண்டு, பிற கோரிக்கைகளை புறக்கணித்ததோடு 23 முன்னணி ஆண் தொழிலாளர்களை சஸ்பெண்ட் செய்தது. இதை எதிர்த்து தொழிலாளர்கள் உண்ணா விரதம், ஆர்ப்பாட்டம், ஊர்வலம் என பெண்களின் போராட்டம் ஷு கம்பெனி வரலாற்றில் முதல் முறையாக வெடித்தெழுந்தது.

போராடும் தொழிலாளர்களை, "சேன்பாக்கர் கர்னல்" என்ற ரவுடியை வைத்து நிர்வாகம் மிரட்டியது. இதையும் மீறி 26/12/95 அன்று பட்டினிப் போராட்டம் நடத்தினர். 2/2/96 வெள்ளியன்று நிர்வாகம் பேச்சு வார்த்தைக்கு அழைப்பதாக கூறி 10 முன்னணி பெண்களை அழைத்து, போலீசையும், ரவுடிகளையும் வைத்து அடித்து உதைத்து வெற்று பத்திரத்தில் கையெழுத்து போடச் சொன்னார்கள். பேச்சு வார்த்தைக்கு உள்ளே சென்ற பெண்கள் அடிபடுவதைக் கண்ட மற்ற பெண்கள் ஆவேசமடைந்து 'பாரதி கண்ட புதுமைப் பெண்'களாக மாறி போலீஸ்-மேலாளர் - ரவுடிகளை நையப்புடைத்து ஓட ஓட விரட்டி அடித்தனர். மேலாளரும், போலீசும் பெண்களின் காலில் விழுந்து மன்னிப்புக் கேட்டனர்.

ஆதிக்க வெறி பிடித்த போலீசும், நிர்வாகமும் 110 பேர் மீது கொலை முயற்சி, கொள்ளை, போன்ற வழக்கு செய்தது. ரவுடிகளை வைத்து இரவு நேரங்களில் வீடுகளுக்கு வந்து மிரட்டி பழி வாங்குகிறார்கள். இதை எதிர்த்து வேலூர் பகுதி மக்களுக்காக பல்வேறு போராட்டங்களை நடத்திய 'பகத்சிங் சோசலிஸ்ட் வாலிபர் சங்கம்' 7ந்தேதி ஆர்ப்பாட்டம் நடத்தியது.

பெண்களின் உரிமைக்கான போர் இன்று எங்கு திரும்பினாலும் உக்கிரமடைந்து வருகிறது.

இந்நிலையில் நிர்வாகம் புதியதாக ஆள் எடுக்க முயற்சி செய்து கொண்டு இருக்கிறது. கருங்காலிகள், துரோகிகளை தூக்கியெறிந்து சேது ஷு கம்பெனி தொழிலாளர்களின் போராட்டம் மேலும், மேலும் தொடரும் என்பது நிச்சயம்.

....செய்தி

**உத்தமன்**



படிப்பகம்

www.padippakam.com

# போலி ஜனநாயகத் தேர்தலை புறக்கணிப்போம்

தேர்தல் கமிட்டி, தேர்தல் நாட்களை அறிவித்துள்ளது. இதைத் தொடர்ந்து அரசியல்வாதிகள் ஆட்சிப் பீடத்தைப் பிடிக்க அடித்து அலை மோதுகின்றனர். ஒருபுறம் தெரு முனைகளில் வண்ண வண்ண கலர்களில் மின் விளக்குகளும், அலங்கரிக்கப்பட்ட மேடைகளும், ஆரவாரக் கூட்டங்களும், மறுபுறம் வாக்குறுதிகளை அள்ளி வீசிக் கொண்டு வீடு, வீடாக சந்து, சந்தாக 'தாய்க்குலமே' என்று ஓட்டுப்பிச்சை எடுத்துக் கொண்டு வரும் அரசியல்வாதிகள்.

ஆனால், 'தாய்க்குலமே' என்று ஓட்டு கேட்கும் அரசியல்வாதிகள் நிலை நிறுத்த துடிக்கும் ஆணாதிக்க சமூகத்தினால் பெண்கள் படும் அவலங்கள்தான் எத்தனை? எத்தனையோ? ஆம், இந்த அரசியல்வாதிகள் முதல், நம் நாட்டை பாதுகாப்பதாகக் கூறிக் கொள்ளும் போலீஸ், இராணுவ வெறி நாய்கள் வரை அனைவராலுமே பெண்கள் நாளுக்கு நாள் பாலியல் வன்முறையால் சிதைக்கப்படுகின்றனர்.

ஆண்களுக்காக பெண்ணை அலங்கரித்துக் கொள்ளச் செய்தும், தொலைக்காட்சி முதல் பத்திரிக்கை விளம்பரங்கள் வரை பெண்களைக் காட்சிகளாக்குவதும், பத்திரிக்கையின் முகப்பு, நடுப்பகுதி முதல் திரைப்பட சுவரொட்டிகள் வரை பெண்களின் அரை, முழு நிர்வாணப் படங்களை போட்டும் சமுதாயத்தின் காட்சிப் பொருளாக்குகின்றன.

பெண் 'கல்லாய்ப் போன கணவனின்' படுக்கையறை போகப் பொருளாக மட்டுமில்லாமல், இச்சமூகத்தாலும் போகப் பொருளாக ஆக்கப்படுகின்றாள்.

இவ்வாறு பல்வேறு வகையில் சிறு பருவத்தில் தந்தையாலும், திருமணமானபின் கணவனாலும், பின மகனாலும் தொடர்ந்து ஒடுக்கப்பட்டு வருகின்றாள். எத்தனை நாளைக்கு இந்த அல்லலகளும், ஓலங்களும்! இவை இன்றும் நீடித்துக் கொண்டே இருகக வேண்டுமா? இல்லை, கூடவே கூடாது.

...இப்பொழுது நமக்குத் தேவை :
இந்தக் கேவலமான அடிமைத் தனத்திலிருந்து விடுதலை!
எல்லாவற்றிலும் சம வாய்ப்பு !
அனைத்து மட்டத்திலும் சம உரிமை !

ஒட்டு மொத்தத்தில் காலங்காலமாக அடிமைப்பட்டு கேவலமான வாழ்க்கை நடத்திக் கொண்டிருக்கும் பெண்களுக்கு விடுதலை.

அதோ வாக்குறுதிகளை அள்ளி வீசிக் கொண்டு, ஓட்டு கேட்டு வருகிறாரே அரசியல்வாதி, அவரா பெற்றுத்தரப் போகிறார்?

இல்லை, நிச்சயமாக இல்லை ! ஏன் ?



படிப்பகம்

www.padippakam.com

'கோரமண்டல்' தொழிலாளர் நடுத்தெருவில் நின்று கொண்டிருக்க, நம் நாட்டின் இலட்சக்கணக்கான தொழிலாளர், விவசாயக் குடும்பங்களின் வாழ்க்கை இருளில் மூழ்கியிருக்க, இதைப் பற்றியே கவலைப்படாமல் அலங்காரத் தோரணங் களுடன் தேர்தல் பவனி வந்து கொண்டிருக்கிறார்.

சாதியத்தை ஒழிப்போம் என்று ஒருபுறம் கூறிக் கொண்டு, மறுபுறம் தாழ்த்தப்பட்ட மக்களின் சாதிய ஒடுக்குமுறைக்கு துணை புரிந்துக் கொண்டு, சாதி பெயர் சொல்லி ஓட்டுக்கேட்டு வந்து கொண்டிருக்கிறார்கள். கூலி, ஏழை உழவர்களை கொடிய வகையில் சுரண்டியும், விவசாயப் பெண்களை இழிவுப் படுத்தியும் கிராமங்களின் 'முடிசூடா மன்னர்களாக' இருக்கும், கொடிய நிலப்பிரபுக்களின் தொங்கு சதைகள்தான் இந்த அரசியல் வாதிகள்.

ஒரு பக்கம் பெண்ணிற்கு சமவுரிமை என்று கூறிக் கொண்டு, மறுபக்கம் பெண்ணடிமைத் தனத்தை ஆழமாக பதிக்க துடிப்பவர்கள்தான் இந்த அரசியல் வாதிகள் !

பன்வாரியை பாலியல் வன்முறை செய்த குண்டர்களை, குற்றமற்றவர்கள் என்று தீர்ப்பு கூறி ஆணாதிக்க பண்பாட்டை நிலை நிறுத்தும் நீதிபதிகளுக்குக் கூட்டாளிகள்தான் இந்த அரசியல்வாதிகள்.

'பெப்சி கோலா' 'கொக்கோ கோலா' போன்ற பன்னாட்டு நிறுவனங்களை ஆக்கிரமிப்பு செய்ய நாட்டின் பொருளாதாரத்தை திறந்து விட்டுள்ளவர்கள்தான் இந்த அரசியல் வாதிகள்.

இப்படிப்பட்ட அயோக்கியர்களா நமக்கு விடுதலை பெற்றுத் தரப் போகிறார்கள் ?

இல்லை ! இவர்கள் நம்மால் ஓட ஓட விரட்டப்பட வேண்டியவர்கள். இச்சமூக அதிகாரத்திலிருந்து தூக்கியடிக்கப் பட வேண்டியவர்கள்.

எப்படி, நாம் நம்முடைய விடுதலையை சாதிக்கப் போகின்றோம்?

நாமே நமக்காக போராடி விடுதலை பெறப் போகின்றோம் !

ஆம்' ஆங்கில ஆதிக்கத்தை எதிர்த்த ஜான்ஸிராணி முதல் இன்று உழைக்கும் மக்கள் விடுதலைக்காக போராடி வரும் ஆந்திர, ஈழப் போராளிகளின் வழியிலேயே சமுதாய மாற்றத்தின் மூலம் விடுதலையை சாதிப்போம்!

இச்சமூகத்தை கட்டிக்காக்க நடக்கும் இப் போலி ஜனநாயக தேர்தலைப் புறக்கணிப்போம்! ஆண் - பெண் பேதமற்ற, சுரண்டலற்ற, சாதிய ஒடுக்கு முறையற்ற சமத்துவ சமுதாயத்தை படைக்க போராட்ட பாதையிலே அணி திரள்வோம்.

**- தேன்மொழி**



படிப்பகம்

www.padippakam.com

சிறு கதை :

# போதை, கள்...

மு. மதிவாணன்

சுவரில் ஒட்டப்பட்டிருந்த நிர்வாண படத்தையே பார்த்துக் கொண்டிருந்தான் குப்பன். சவாரி கிடைக்காத நேரங்களில் சாலை ஓரத்தில் உள்ள மரத்தின் கீழ் ரிக்ஷாவை நிறுத்தி அதில் தன்னை ஒரு ராஜாவாக நினைத்துக் கொண்டு கம்பீரமாக அமர்ந்துக்கொண்டு, காதில் சொருகி வைக்கப்பட்ட பீடியை எடுத்து பற்ற வைத்து புகை விடுவான், மந்தமான போதையில் திளைப்பான். இப்போது ஆபாச போஸ்டரின் போதையும் சேர்ந்து கொண்டது.

அந்த படத்தை எப்படியாவது பார்த்துவிட வேண்டும் என்ற எண்ணம் இப்போது வெறியாக வளர்ந்துள்ளது. போஸ்டரில் உள்ள பெண்ணின் ஏறக்குறைய முழு நிர்வாண நிலையில் தன் அங்கங்களைக் காட்டி நின்றிருந்த நிலை, அவனுக்கு மேலும் கிளர்ச்சியை உண்டு பண்ணியது, படத்தின் பெயர் அவனுக்குத் தெரியாது. ஆனால் எந்த தியேட்டரில் திரையிடப்பட்டிருக்கிறது என்பது மட்டும் குப்பனுக்குத் தெரியும்.

"இன்னா குப்பா! அந்த படத்த இன்னும் பார்க்கலியா நீ, ஒரு சீனு கீதுப்பா, அஞ்சு நிமிஷம், பார்த்தா உடம்பெல்லாம் ஜிவ்வுன்னு ஏறுது. படத்தைப் பாத்துட்டு வந்து வீட்டுல ஒரே பூஜைதான்" என்று அவனுடைய சகாக்கள் படம் பார்த்துவிட்டு வந்து சொன்னது அவன் காதில் இன்னும் ஒலித்துக் கொண்டே இருக்கிறது. மோட்சம தியேட்டரில் திரையிடப்பட்டுள்ளதாகவும் சொன்னார்கள்.

பீடியின் நெருப்பு உதடு வரை வந்தது. தெரியாமல் போதையில் இருந்தவனுக்கு நெருப்பு சுட்டதும் விருட்டென்று தூக்கி எறிந்தான்.

குப்பன் தான் நினைத்ததை சாதிக்க, கையில் பணம் இல்லை. சவாரி கிடைக்காதா என சாலையில் செல்பவர்களை பார்த்தான். இன்று மட்டும் யாரிடமும் அதிகமாய்க் கொடு



படிப்பகம்

www.padippakam.com

என்று வம்பளக்கக் கூடாது என்று தன் முரட்டு குணத்தைக்கூட தளர்த்தி வைத்துக் கொண்டான் குப்பன்.

கீழே இறங்கி ரிக்ஷாவை துடைத்துக் கொண்டிருக்கையில், 'ஏம்பா ரிக்ஷா வருமா? மோட்சம் தியேட்டர் வரைக்கும் போகணும்' குரல் கேட்டு நிமிர்ந்து பார்த்தான். 'அடிச்சக்க! நான் எங்க போகலாம்னு நினைச்சேனோ அங்ககேயே சவாரி!

'வரும் சார்' என்று சொல்லிவிட்டு மனதுக்குள் துள்ளி குதித்தான்.

இருபது ரூபாய் கேட்டான்.வந்தவர்கள் பத்து ரூபாய்தான் தருவேன் என்றதும் ஒத்துக் கொண்டான். 'மேல ரெண்டு ரூபா போட்டுக் கொடுங்க சார்' என்று ரிக்ஷாவின் சீட்டைத் தட்டினான். ரெண்டு ரூபாய் மேலே கேட்டதற்கு காரணம் குறைந்த பட்ச டிக்கட்டே பத்து ரூபாய், ரிக்ஷாவை நிறுத்துவதற்கு இரண்டு ரூபாய், வந்தவர்களும் மவுனமாய் ஏறி ரிக்ஷாவில் உட்கார்ந்து கொண்டனர்.

தியேட்டர் முன் ரிக்ஷாவை நிறுத்தினான். மனிதர்கள் முடிச்சு முடிச்சாய் நின்றிருந்தார்கள். படம் பார்த்துவிட்டு வருபவர்களும், பார்க்க வந்தவர்களும் ஒன்றாய் கலந்து விட்டதால் கூட்டம் அதிகமாக இருந்தது. டிக்கெட் கிடைக்குமா? என குப்பன் உச் கொட்டினான்.

"ஏய் நாங்க லைன்ல நிக்கறது கண்ணுக்கு தெரியல, நடுவுல வந்து நிக்கற' என்று வரிசையில் நிற்கும் ஒருவன் சொல்ல குப்பனுக்கு கோபம் பொத்துக் கொண்டு வந்தது.

'ஏய், யாரைப் பார்த்து யேய் .. மூஞ்ச கொழப்பிடுவேன்.' முரட்டுக் குணம் முஷ்டியைத் தூக்கியது.

தியேட்டரின் உள்ளே வந்து உட்கார்ந்த பின்பு பெருமூச்சு விட்டான். எப்ப படம் போடுவார்கள் என்ற ஆவல் இப்போது அவன் மனதில் உட்கார்ந்துக் கொண்டது.

அரை மணி நேரமாய், விளம்பரம், புடவை, எண்ணெய் சோப்பு, பைனான்ஸ் என்று ஓடிக்கொண்டிருந்தது.

குப்பன் வெறுப்பின் உச்சத்துக்கே போனான். எழுந்து ஆப்ரேட்டர் ரூமைப்பார்த்து ஜிவ்வென்று சத்தத்துடன் விசில் அடித்தான். இவனோடு சேர்ந்து பல விசில் சத்தம் தியேட்டருக்குள் கேட்டது.



படிப்பகம்

www.padippakam.com

அவன் எதிர்பார்த்தபடியே படம் ஆரம்பித்த உடனே காட்சிகள், போஸ்டரில் பார்த்த அந்த நாயகிதான். நைட் கவுனில் உள்ளே போட்டிருக்கும் உள்ளாடை தெரிந்தது. போதை கொஞ்சம் கொஞ்சமாக ஏறியது.

உடலுறவுக் காட்சியின் போது அவனை போதையின் உச்சத்துக்கே கொண்டு சென்றது. அதன் பிறகு ஓடிய எத்தனையோ காட்சிகள் அவன் மனதில் நிற்கவில்லை. உடல் உறவுக் காட்சி மட்டும் அவன் கண் முன் நின்றது.

வெளியில் வந்து ரிக்ஷாவை தள்ளினான். பக்கத்தில் இருந்தவனிடம் மணி கேட்டான். பத்துக்கு மேலாகிவிட்டது. அவனிடமே ஒரு பீடி கேட்கலாமா என நினைத்தான். அதற்குள் அவன் போய் விட்டான். ரிக்ஷாவை ஏறி மிதித்தான். மீண்டும் வீட்டின் முன் நிறுத்தினான். உள்ளே போனான். இருட்டாய் இருந்தது. நடந்து போகும்போது ஏதோ காலில் பட்டு டக் கென்று சத்தம் எழுப்பியது. ஓர் உருவம் படுத்திருந்தது. அவனுடைய மனைவி கண்ணம்மாதான். அருகில் சென்று நின்றான். மீண்டும் அந்த உடலுறவுக்காட்சி அவன் கண் முன் நின்றது. நடிகையின் அங்கங்கள், ஒவ்வொன்றாய், வரிசையாய், மொத்தமாய். அதே போதையுடன் கண்ணம்மா பக்கத்தில் படுத்தான். மேலே கையைப் போட்டு தன் உடம்போடு அணைத்தான். அவள் அசைவற்றுக்கிடந்தாள். லேசான முனகல் சத்தம். குப்பன் தீப்பெட்டியை உரசி வெளிச்சத்தில் பார்த்தான். நைந்துபோன உடம்பு, வாடிய முகம், எண்ணெயே காணாத பிசுபிசுத்த தலை, கசக்கி கட்ட மாற்றுப் புடவை இல்லாததால் கிழிந்த புடவையில் இருந்து நாற்றம். அவள் படுத்துக் கிடந்தாள், காடா விளக்கை ஏற்றினான். மங்கலான வெளிச்சத்தின் மூலையில், அவனுடைய குழந்தைகள். சூம்பிய வயிறு, பசியால் இளைத்த உடம்பு, ஆடையே இல்லாத நிர்வாணத்துடன் தூங்கிக் கொண்டிருந்தன. வீட்டினுள் அவன் கண்கள் சுற்றியது. கரி படிந்த இரண்டு அலுமினிய பாத்திரம், மூலையில் உருண்டு நின்றது. மனைவி சுரத்தால் இருப்பதும், தன் குழந்தைகள் பசியால் சுருண்டு கிடப்பதும், அவனுக்குப் புரிந்தது. போதை கொஞ்சம் கொஞ்சமாக இறங்கியது. நான் யார், எங்கு வாழ்கின்றோம் என்ற சூழல் புரிந்தது. தட்டிக் கதவை திறந்துக் கொண்டு வெளியில் வந்தான்.

காற்று வேகமாக அடித்ததில் கூவத்தின் நாற்றம் குப்பன் முகத்தில் வாரி அறைந்தது. ●



படிப்பகம்

www.padippakam.com

# ஹவாலா மோசடி

அண்மைக் காலமாக இந்தியாவின் எல்லா தினசரி, வார, மாத பத்திரிகைகளிலும் இடம் பெற்று வருவது பரபரப்பான ஹவாலா மோசடி குறித்த செய்திகள் ஆகும்.

என்ன இது ஹவாலா? திருநெல்வேலி அல்வாவா? இல்லை புதிய சோப்பா? அல்லது தொட்டுக்க ஊறுகாயா? அல்லது புதிய டிசைன் புடவையா? இல்லை புதிய திரைப் படமா? என பல்வேறு கேள்விகளுடன் பலர் இருக்கலாம். ஆனால், நமது வாசகர்கள் ஹவாலாப் பற்றி அறிந்துக் கொள்ள சில தகவல்களை உங்களுடன் பகிர்ந்துக் கொள்கிறோம்.

நாளுக்கு ஓர் அமைச்சர் பதவி விலகுவதும் அவர் ஹவா வா மோசடியில் குற்றவாளி என குற்றம் சாட்டப்படுவதும், இந்த ஹவாலா மோசடியின் பின்னணியை தெரிந்துக் கொண்ட வர்களுக்கு ஒரு பெரும் கேலிக் கூத்தாகவே மாறிவிட்டது.

நாடு முழுக்க பேசப்பட்டு வரும் இந்த ஹவாலாவின் பின் னணியை நாமும் சற்று ஆழமாக பார்க்க வேண்டிய அவசியம் உண்டல்லவா?

ஹவாலா என்பது சட்ட விரோதப் பண பரிவர்த்தனை எனப்படும்.

பொதுவாக, நமது நாட்டு ரூபாயை வெளிநாட்டு செலா வணியாக மாற்றுவதற்கும் வெளிநாட்டுப் பணத்தை உள்நாட்டு செலாவணியாக மாற்றுவதற்கும் இந்திய ரிசர்வ் வங்கியின் அனு மதி பெற வேண்டும். மொத்த தொகையில் 50 சதவிகிதம் சந் தையிலும் மீதியை ரிசர்வ் வங்கி நிர்ணயிக்கும் மதிப்பிலும் பணத்தைப் பெறலாம். வரியைத் தவிர்ப்பதற்கும் அதிக அல்லது குறைந்த மதிப்பிலும், குறுகிய நேரத்திலும் ரூபாயை பெற்றுக் கொள்வதற்கும் ஹவாலா கையாளப்படுகிறது.

உலகில் மிகவும் வசதியுள்ள பண முதலைகள் குறுகிய நேரத்தில் அதிக லாபம் பெற பங்குச் சந்தையின் ஊக வணிக சூதாட்டத்திற்கும் சட்ட விரோதமாக சேர்த்து குவித்த பணத்தை



படிப்பகம்

www.padippakam.com

(கறுப்புப் பணம்) வெளி நாடுகளில் உள்ள வங்கிகளில் போடுவதற்கும் அரசியல்வாதிகளுக்கு அதிகாரிகளுக்கும் லஞ்சமாக அளிப்பதற்கும் கள்ளக் கடத்தல் குறிப்பாக, தங்கக் கடத்தல் செய்வதற்கும் இம்முறை செயற்படுகிறது.

அதிகாரப் பூர்வமாக குறிப்பிடப்பட்டுள்ள பண மதிப்புத் தொகையை விட அதிகம் (அ) குறைத்து (சூழ்நிலைகள் (அ) நபர்களை பொறுத்து மாறும்) குறுகிய நேரத்தில் ரசீது இன்றி நம்பிக்கையின் அடிப்படையில் கொடுக்கப்படும். கள்ளச் சந்தைக் கும்பல்களால் நடத்தப்படும் இந்தத் (ஹவாலா) தொழிலின் மூலமாகத்தான் உலகளவில் ஆயுத விற்பனை, போதைப் பொருள் விற்பனை போன்ற சர்வதேசக் கடத்தல்களின் கொடுக்கல் வாங்கல், பல்வேறு போலி நிறுவனங்களின் பெயர்களில் செய்யப்படுகின்றன. கடத்தல்கள், ஏமாற்று, மோசடி, ஊழல், இலஞ்சம் என்பதை மட்டுமே முக்கிய அம்சங்களாகக் கொண்டது இந்த ஹவாலா. இந்த ஹவாலாவில் ஏற்பட்ட ஒரு மோசடிதான் தற்போது பரபரப்பாக பேசப்படும் விவகாரம்.

'காஷ்மீர் போராளிகள்' என ஐயம் கொள்ளப்பட்ட இரண்டு நபர்களை போலீஸார் விசாரணை செய்ததில் மத்திய புலனாய்வு துறை இம் மோசடியைக் கண்டுபிடித்தது. வெள்ளைக் காரன் நமது நாட்டை அடிமைப்படுத்தி ஆண்டு வந்த காலத்தில் இராணுவத்தில் வெள்ளையனுக்கு நல்ல சேவை செய்ததற்காக 'ராவ் சாகேப்' என பட்டம் பெற்ற ஜோதி பிரசாத் ஜெயின் என்பவரின் மகன்கள் ஜெயின் சகோதரர்கள் என அழைக்கப்படும் 3 நபர்கள்தான் இந்த மோசடியில் முக்கியமானவர்கள் என தெரிய வந்தது. இந்த மோசடியில் இலஞ்சம் கொடுத்த ஜெயின் சகோதரர்கள்தான் பிலாய் இரும்பு உருக்குத் தொழிற்சாலையில் தொழிலாளர்களுக்காக சமரசமின்றி போராட்டம் நடத்திய 'சத்தீஷ்கார் முக்தி மோர்சா' என்ற அமைப்பின் தலைவர் சங்கர் குகாநியோகி என்பவரை 1991 செப்டம்பரில் கொலை செய்தவர்கள். நியோகியின் மனைவி வழக்கை விசாரணை செய்த இதே சி.பி.ஐ.யிடம் அன்று புகார் கொடுத்தும் இது வரையில் இவர்கள் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இந்த ஜெயின் சகோதரர்கள் வீட்டில்தான், 2 டைரிகள், 2 குறிப்புப் புத்தகங்கள் மற்றும் சில ஆவணங்கள் கைப்பற்றப்பட்டன. அவற்றில் பீரங்கி ஊழல் புகழ் இராஜீவ் முதல், சர்க்கரை ஊழல், பங்குச் சந்தை ஊழல் மன்னன் நரசிம்மராவ், மைய



படிப்பகம்

www.padippakam.com

அமைச்சர்கள், அரசு அதிகாரிகள் வரை கோடிக் கணக்கில் பணம் லஞ்சமாக வாங்கியிருப்பது அறியப்பட்டது. புனிதமான-தூய்மை வாதக்கட்சி என பீற்றிக்கொள்ளும் பா.ஜ.க. தலைவர் அத்வானி, சமூக நீதி காக்கும் கட்சி என கூறிக் கொள்ளும் ஜனதா தளத் தலைவர் எஸ். ஆர். பொம்மை உட்பட 62 அரசியல்வாதிகள், ஜெயின் கம்பெனியின் 24 ஊழியர்கள், அரசு மற்றும் பொதுத் துறையைச் சார்ந்த 23 அதிகாரிகள் உட்பட 114 நபர்களுக்கு 1988 முதல் 1991 வரை கொடுக்கப்பட்ட 65-47 கோடி ரூபாய் குறித்த பட்டியல் கிடைத்தது.

'சென்னைக்கு கொடுக்கப்பட்டது 50 இலட்சம்' என்ற ஒரு குறிப்பும் அந்த டைரியில் உள்ளது. சென்னைக்கு என்றால் தமிழகத்தின் ஊழல் ராணி ஜெயாவிற்குதான் என்பது யாவரும் அறிந்ததே.

மேலும், பாரதீய ஜனதா கட்சி ஆளும் 2 மாநில முதல்வர்கள், ஆளுநர்கள் உட்பட எங்கும் பரந்துள்ள ஊழல்தான் இந்த ஹவாலாவின் சிறப்பு அம்சம்.

## இந்த மோசடி ஏன் செய்யப்பட்டது?

தேசிய அனல் மின்சக்தி கழகம், இந்திய இரும்பு நிறுவனம், தேசிய நீர் மின்சக்தி நிறுவனம் ஆகிய முக்கிய பொதுத் துறை நிறுவனங்களின் கீழ் இயங்கும் மராட்டியத்திலுள்ள துர்காயன் இரும்பு உருக்கு தொழிற்சாலை, காஷ்மீரில் உள்ள நீர்மின் திட்டம் போன்ற சில தொழிற்சாலை மற்றும் உள் கட்டுமானம் குறித்த பணிகளை ஒட்டி ஒப்பந்தம் செய்து கொள்ளவே இந்த 'அன்பளிப்பு' அளிக்கப்பட்டது. எவர் 'அன்பளிப்பு' வாதிகள்? பிரான்சு, ஸ்விட்சர்லாந்து மற்றும் இத்தாலி ஆகியவற்றின் பன்னாட்டு தொழிற் கழகங்களே. இவைகளுக்கு சேவை செய்ய ஏஜண்டுகள் நாடு முழுக்க காத்திருக்கின்றார்கள்.

ஹவாலா மோசடி பல ஆண்டு காலமாக நடைபெற்று வந்தாலும் கடந்த 5 ஆண்டுகளாக தீவிரமாக நடைமுறைப் படுத்தப்படும் புதிய பொருளாதாரக் கொள்கையினால் தற்போது பூதாகரமாகியுள்ளது.

நாட்டை கொள்ளையடிப்பதற்கான போட்டியில் யார் மிஞ்சுவது என்பதில் ஏற்பட்ட பூசல்களே இது பரவியுள்ளதற்



படிப்பகம்

www.padippakam.com

கும், அம்பலத்திற்கு வந்ததற்கும் காரணங்களாகும். வறுமை வேலையின்மை, கல்வியின்மை, குழந்தை உழைப்பு, பெண்களின் அவல நிலை, சாதி, மத வெறி ஆகியவைகளைக் குறித்து சிறிதும் அக்கறையற்ற ஆளும் கும்பல்களே அற்பத்தனமான 'கமிஷன்'களுக்கான இம்மோசடிகளுக்கு மூல காரணம்.

சட்டத்துக்கு முன் எல்லோரும் சமம் என சொல்லும் நீதி மன்றங்கள் பணத்துக்கு விலை போவது பற்றி நாம் அனைவரும் அறிந்ததே. இன்று இந்த உச்ச நீதி மன்றம் 'சனநாயக' வேசம் போடுவது நரசிம்மராவின் ஊழலை மறைத்த இவர் புனிதமானவர் ஊழல் செய்தவர்களை தனது கட்சி என்று கூட பார்க்காமல் நடவடிக்கை எடுப்பவர் என்று விளம்பரம் செய்து, வருகின்ற தேர்தலில் ஓட்டு வாங்கத்தானே தவிர அன்னிய சரணடலை ஒழித்து உழைக்கும் மக்களை பாதுகாக்க அல்ல. அது மட்டுமல்ல, இந்த மோசடி வழங்கிய பணத்தைக் கொடுத்த பன்னாட்டு நிறுவனங்கள் மீது எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. இந்திய இலஞ்ச ஒழிப்பு சட்டத்தின் மூலம் ஜெயின் மற்றும் லஞ்சம் பெற்ற சிலர் மீது மட்டுமே குற்றம் சாட்டப்பட்டு உள்ளது. ராஜீவ் காந்தியின் மரணம் பற்றிய விசாரணை ஆவணங்களை தொலைந்து போகவிட்ட சி.பி.ஐ. இந்த வழக்கை எப்போது தொலைய விட்டு விடுகிறார்களோ?

ஆனால் துன்பங்களிலும், வறுமையிலும், கடுமையான விலைவாசியிலும் சிக்கி தவித்து, குடும்பச் சுமைகளை எல்லாம் தாங்கி வாழும் உழைக்கும் பெண்களாகிய நாம் ஒன்றை மறந்து விடக் கூடாது.

அரசியல், உலக நடப்புகள், பத்திரிக்கைகள், எல்லாம் ஆண்களுக்கே என நாம் இன்னமும் நினைத்துக் கொண்டு இருந்தால், அது நமக்கு நாமே செய்யும் துரோகமாகும். தமிழக பெண்களின் வரலாற்றுக்கு மிகவும் தடையானது ஆகும். ஆகவே இது போன்ற சரண்டல்கள், ஊழல்கள், மோசடிகள் நமது நாட்டின் பொருளாதாரத்தை பாதித்தால் அது நம்மையும் பாதிப்படையச் செய்யும். நமது பொருளாதார நெருக்கடிகளை மேலும் அதிகமாக்கி நம்மை வறுமையில் வாட்டும். அதனால் நாமும் நமது பங்கிற்கு பணத்தின் மதிப்பு குறையும் நமது நாட்டின், நமது ஆட்சியாளர்களின் லட்சணங்களை அனைவருக்கும் அம்பலப் படுத்துவோம்! எதிர்த்துப் போராடுவோம்!

—சத்யா



படிப்பகம்

www.padippakam.com

# பொங்கி எழுந்த விவசாயப் பெண்கள் போராட்டம்

சேலம் மாவட்டத்தில் சின்ன கண்டி என பெயர் பெற்ற கிராமம் செந்தாரப்பட்டி. இங்கு கூலி ஏழை விவசாயிகள் தான் அதிகமாக வாழுகிறார்கள். நூற்றுக்கு எண்பது சதவிகித பெண்களும் விவசாயத்தில் கடுமையாக உழைக்கிறார்கள். இதில் அறுபது சதவிகிதப் பேர் நிலமற்ற கூலி, ஏழைக் குடும்பப் பெண்களே! ஆண், பெண் என பாராமல் உழைப்பை உறிஞ்சி கொழுக்கும் நிலவுடமையாளர்கள் நூற்றுக்கணக்கான தரிசு, புறம் போக்கு, கோயில் மான்ய நிலங்களையும் மக்களிடமிருந்து நூறு பத்து கொடுத்து அநியாயமாக பிடுங்கிய பட்டா நிலங்களையும் குவித்து வைத்திருக்கிறார்கள். நிலம் குவிந்து இருப்பதால் இதைச் சார்ந்து கூலி மக்களும் குவிக்கப்பட்டு இருக்கிறார்கள். ஊரில் மக்கள் தொகை 40 ஆயிரத்தை எட்டுகிறது.

பெண்கள் மீதான சுரண்டல் இங்கு மிகவும் அதிகமாக உள்ளது. நிலங்களில் கடுமையாக உழைக்கிறார்கள். நாள் பொழுது முழுசா வேலை செய்ய வேண்டியுள்ளது. ஒரு நாள் வேலை செய்தா 50,பைசா 25 பைசா கூலி கூட ஒரு காலத்தில் கொடுக்கப்பட்டு, படிப்படியா இன்னிக்கு ரூ. 12 வரை உயர்ந்துள்ளது. இந்த 12 ரூபாவ வச்சுதான் இன்னிக்கு விக்கிற வெல வாசியில குடும்பம் நடத்த வேண்டியுள்ளது'.

புருசன் பண்ணைகளின் காட்டில் வருடக் கூலிக்கு அடிமையாக வேலை செய்தால் அவனுடைய குடும்பமே அந்தப் பண்ணைக்கு இலவசமாய் வேலை செய்ய வேண்டும். சிறு குழந்தைகளுக்குக் கூட மாடு ஓட்டுவது, சாணி அள்ளுவது, துணி துவைப்பது போன்ற வேலைகள் கொடுக்கப்படுகிறது. குத்தகை வாரத்திற்கு பண்ணைகளின் நிலங்களை ஓட்டி வரும் விவசாய குடும்பங்களின் பெண்கள் மிகவும் கடுமையாக உழைக்கிறார்கள்.

கணவனின் கஷ்டத்தில் கூடமாட வேலை செய்வதாக எண்ணி ஏர் ஓட்டுகிறார்கள், பார் போடுகிறார்கள். ஒரு ஆணுக்கு நிகரான வேலையை செய்கிறார்கள். குத்தகையாளர் பண்ணையின் மற்ற நிலத்தில் ஓசி வேலை செய்ய வைக்கப்படு



படிப்பகம்

www.padippakam.com

கிறார்கள். பண்ணைகளுக்காக இராப் பகலாய் உழைத்துக் கொடுக்கிறார்கள்.

சிறு விவசாய குடும்பங்களில் இருக்கும் பெண்களின் நிலையோ மிகவும் துன்பகரமானது. ஒரு நாள் கூட ஓய்வின்றி காட்டில் களை வெட்டுவது, தண்ணீர் பாய்ச்சுவது, உரமிடுவது, கணவனோடு சேர்ந்து எல்லா கடின வேலைகளிலும் நாள் முழுக்க செய்ய வேண்டியுள்ளது. ஆனால் எந்தவிதக் கூலியும் இவர்களுக்கு கொடுக்கப்படுவது இல்லை. சாப்பாடு, துணி மணியே கூலி என ஓர் அடிமையாக மனைவி என்ற 'மதிப் போடு' வாழ்கிறார்கள் உழைத்து பலன் எதுவும் இல்லை. உரம், பூச்சி மருந்து விலை, அரசின் வரிகள், கடன் கொடுக்க மறுப்பது, ஜப்தி செய்வது போன்றவைகளால் மனசு நொடிஞ்சு போகிறார் கள். கூலி வேலை செய்து வாழ்ந்தால் கூட பரவாயில்லை என்று சிறு விவசாயக் குடும்பப் பெண்கள் நினைக்கும் அளவுக்கு வேலைச் சுமையும், ஓயாத உழைப்பும், பலன் எதுவுமற்ற வாழ்க்கையாகி உள்ளது.

இப்படி உழைக்கும் பெண்களின் நிலைமைகள் மிகவும் கொடுமையாக இருக்கின்றது. வெந்த புண்ணில் வேலைப் பாய்ச் சுவது போல வேலைப்பளு அதிகமாக்கப்படுகின்றது. காடுகளில் களை வெட்ட போனால் சிறு மண் வெட்டிகளைக் கொடுக்கிறார் கள். மண்வெட்டியால் களை வெட்டினால் ஓர் ஏக்கர் வெட்டும் நேரத்தில் 2 ஏக்கர் வெட்டி விடலாம். இதனால் காட்டுக்காரர் களில் வசதி படைத்தவர்கள் மண் வெட்டிகளை செய்து வைத்துக் கொண்டு களை வெட்டிக்கு பதிலாக மண்வெட்டியைக் கொடுத்து வேலை செய்ய சொல்வதால் சின்னஞ் சிறுசுகளும், முதியோர்களும் வேலை செய்ய வருகிறார்கள். கூலி ஒரே கூலி தான். ஆனால் வேலைப் பளு அதிகம். புகையிலை, வாழைத் தோட்டங்களில் ஆண்களுக்கு இணையாக வேலை வாங்கப் படுகிறது. ஆனால் குறைந்த கூலியே கொடுக்கப்படுகிறது. கிழங்கு மில்களில் கூட 'பொட்டையாள் கூலி' என தனி கூலி முறை உள்ளது. வேலை ஒன்றாக இருந்தாலும் கூலியில் மாறுபாடு செய்து பெண்களின் உழைப்பு சுரண்டப்படுவது மட்டு மல்ல; "பொட்டச்சி" என்று கேவலமாக நடத்தப்படுகிறார்கள். உழைக்கும் இடத்தில் ஏற்படக் கூடிய எந்தவித இழப்புக்கும் எந்த பாதுகாப்பும், உதவியும் கிடையாது.



படிப்பகம்

www.padippakam.com

உழைக்கும் பெண்கள் மீதான பொருளாதார சுரண்டல்கள், இப்படி இருக்க, இந்த சுரண்டல் நீடித்து இருக்க அவர்கள் மீது சுமத்தப்படும் சமூக ஒடுக்கு முறைகளைப் பற்றிக் காண்போம்.

வரதட்சணைக் கொடுமை இன்று கிராமப்புற கூலி ஏழை மக்களின் வாழ்க்கை வரையிலும் பரவிவிட்டது. சாப்பிட வட்டி, குடிக்க செம்பு இப்படியிருந்த இருந்த இடத்தில் என்ன கொண்டு வந்தே? என்ற கேள்விகள் எழுந்து தற்கொலைகள் சகஜமாகி விட்டது. வாழாவெட்டிகளின் எண்ணிக்கை அதிகமாகிறது. இரண்டு தார மணமுறை பிரவி வருகிறது. 'பொட்டபுள்ள பெத்த பெண்ணுக்கு புகுந்த வீட்டில் பெருமை இல்லை' ஒன்று புள்ளைய கொல்லனும் அல்லது தாய் வீடே தஞ்சம் என வாழணும். 'வாழா வெட்டி' என்ற பழி சொல்லும், ஊர் கண் முழுக்க இவர்களையே சுற்றி வருவதும் கொடுமை. கிராம பஞ்சாயத்துக்கள், ஊர் விசயங்கள் எதிலும் பெண்கள் தலையிடவோ, கருத்து சொல்லவோ, ஏன்? என்ன நடக்கிறது என பார்க்கக்கூட உரிமையில்லை. ஆண்கள் தெருக்களில் வரும்போது வாசலின் முன் கால் நீட்டி அமர்ந்திருக்கவோ, கட்டிலின் மேல் குந்தியிருக்கவோ கூடாது. பெண்கள் மீதான பிரச்சனைகளைக்கூட ஊரில் வைத்து நியாயம் பேசுவது இல்லை. அவுசாரி நியாயம் என்று கூறி ஊர் எல்லைகளில் வைத்து பேசுகிறார்கள். அங்கும் உண்டா, இல்லையா என்பதற்கு மட்டுமே பெண் பதில் பேசலாம். விளக்கம், அல்லது பிரச்சனைகளைப் பற்றி பேசுவது திமிராகக் கருதப்படுகிறது. பட்டியில் அடையாத மாடு-திருட்டு மாடு என்றே கூறப்படுகிறது.

குடிப்பழக்கத்தின் காரணமாக பொருட்களை இழப்பதுடன் மன நிம்மதியே இழந்து குடும்ப வாழ்வே நாசமாகிப் போகிறது. சோம்பேறித்தனமும், ஊதாரி வாழ்வும் கொண்டு சமூக உணர்வுகள் இல்லாத ஆண்கள் பெண்களின் உழைப்பு செலவில்தான் இருக்கிறார்கள். கஷ்டப்பட்ட காசுகளை எடுத்து குடித்து விடுகிறார்கள். அல்லது சூதாடுகிறார்கள். தட்டிக் கேட்டால் அடி, உதை எந்த ஒரு சின்னப் பிரச்சனையைப் பற்றி கேட்டாலும் 'உனக்கு இந்த புருசன் பத்தாம வேறு எவனையோ பாத்திட்டியா?' என்று களங்கப்படுத்தப் பட்டு, கேவலப் படுத்தப்படுகிறாள். மற்ற ஒர் ஆணோடு பேசுவதே கள்ளத் தொடர்பு என சித்தரிக்கப்படுகிறது. சந்தேகங்களின் அடிப்படையில் அடி, உதை என குடும்ப உறவுகள் மோசமாகிப் போகின்றன. இதற்கு



படிப்பகம்

www.padippakam.com

பெண்களில் சில ஊதாரிகள் இருப்பது அவர்கள் பேசுவதற்கு ஒரு காரணமாகிப் போகிறது.

குடும்பங்களில் பங்காளிச் சண்டை, மாமன், மாமியார் மற்றும் மருமகள்கள் சண்டைகளில் கூட பெண்களை கேவல மாக பேசுகிறார்கள். குடும்பங்களில் பெண்களுக்கு இருக்கும் வேலைகளுக்கு ஓய்வே இல்லை. சமையல், விறகு பொறுக்குவது, குழந்தை குட்டிகளை பராமரிப்பது, மாடு கன்றுகளை பார்ப்பது, கடைகளுக்கு போவது, தண்ணீர் எடுப்பது, இப்படி பம்பரமாய் சுழன்று வேலை செய்து, ஊசி போல தேய்ந்து வருவது பெண் களே! அது கடமையாகவே போதிக்கப்படுகிறது. இதற்கு கூலி கொடுப்பது யார்? நிச்சயம் அது முதலாளிகளாக, பண் ணைகளாக இருக்க வேண்டும்.

பெண்கள் மீது தொடுக்கப்படும் பாலியல் பலாத்காரம் கூட மிகவும் அதிகமாகிறது. பள்ளிச் சிறுமிகள் கூட திருமண ஆசை காட்டி காதல் வேசம் போட்டு நாசமாக்கப் படுகிறார்கள். வேலையிடங்களில் ஆண்டைகளால் பாலியல் சுரண்டல் நடைபெறுகிறது. யார் ஒரு மாதிரி என நோட்டம் விட்டுத் திரியும் ஆடவர்களின் கண்களில் சிக்கி சீரழியும் குடும்ப பெண்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகமாகிறது. திரைப்படக் கலாச்சாரம் இவைகளை வளர்த்து விடுகிறது. இதனால் குடும்பங்களில் குழப்பங்கள், அவமானங்கள், தற் கொலைகள் என பெருகி வருகின்றன. இளம்பிள்ளை திருமணம் முறை என்ற பெயரில் பொருந்தாத திருமணங்கள், இரட்டைதார முறை போன்ற கொடுமைகளால் கூட பெண்ணின் சனநாயக உரிமைகள் பறிக்கப்படுகின்றன.

(இன்று பான்பராக் கலாச்சாரம் கூட பெண்ணின் மீது திணிக்கப்படுகிறது. பெட்டிக்கடை தோறும் பான்பராக்)

'பொட்டச்சி படிச்சி' என்ன ஆவப் போகுது? படிக்கப் போனா கெட்டுடுவா. இவ படிச்சா மட்டும் வேல கெடச் சிடுமா? என பல காரணங்கள் கூறி பெண் குழந்தைகளின் படிப்பு நிறுத்தப்படுகிறது. குழந்தைகளைப் பார்க்கவும், சமையல் செய்யவும், ஆடு மாடு ஓட்டவும், பெண் குழந்தைகளை வைக் கிறார்கள். காலங்காலமா உழைத்து ஓய்ந்து போன பெரியவர் கள் மதிக்கப்படுவது இல்லை. அடிபோடி கிழவின்னு ஒதுக்கப்



படிப்பகம்

www.padippakam.com

படுகிறார்கள். கவனிப்பாரற்று சமூகத்தின் அல்லது குடும்பத்தின் மைபோலப் பார்க்கப்படுகிறார்கள்.

இப்படி குறைந்த கூலி கொடுமையாலும், நில உரிமை இன்றியும், பல சமூக பொருளியல் ஒடுக்கு முறைகளாலும், பாலியல் ஒடுக்கு முறைகளாலும் பாதிக்கப்பட்டு விழி பிதுங்கி நின்ற பெண்களிடையே நாம் குறைந்த கூலிக் கொடுமையை எதிர்ப்போம், விலை வாசிக்கு ஏற்ற கூலிக்காக போராடுவோம்! மண் வெட்டி வைத்து வேலை செய்யும் பெண்களுக்கு ஆணைப்போல் கூலி கொடு! சம வேலைக்கு சம கூலி பெற போராடுவோம்! என்ற முழக்கத்துடன் பிரச்சாரம் செய்த போது பெண்களின் ஆவேசம் கிளர்ந்து எழுந்தது. நமது பிரச்சனைகளை மட்டும் நமக்காக சங்கம் வந்துள்ளது என உணர்ந்துக் கொண்ட பெண்கள் பெருத்த ஆதரவை வழங்கினர். 20-11-95 அன்று நடைபெற்ற அடையாள வேலை நிறுத்த போராட்டத்தில் சுமார் 7000 பெண்கள் முழுமையாக கலந்து கொண்டனர். தவிர வேலைக்கு போனவர்களைக் கூட தடுத்து நிறுத்துவதில் பெரும்பங்கு ஆற்றினர்.

உழைக்கும் பெண்கள் ஒன்றுபட்டு நிற்கும் பலம் எவ்வளவு மகத்தானது என்பதை நிரூபித்தனர். காட்டுக்காரர்களை அன்றைய பொழுது அங்குமிங்கும் அலைய வைத்தனர். செய்த வேலைகள் பாதியிலேயே நிறுத்தப்பட்டது. பயிர் நடுவது, விறகு வெட்டுவது போன்ற வேலைகள் கூட ஆண்கள் கூட கூறுமளவிற்கு பெண்களின் பங்களிப்பு உழைக்கும் மக்கள் ஆணாயிருந்தாலும் பெண்ணாயிருந்தாலும் உழைப்புச்சுரண்டல் முறை இருக்கும் வரையிலும் அடிமைகளே! இந்தக் கூலி அடிமைகள் நடத்தும் போராட்டம் நிச்சயம் ஓர் ஆண், பெண் சமத்துவ சமுதாயத்தை படைக்கும் என்பதற்கு, ஒரு நல்ல முன் உதாரணமாக செந்தாரப்பட்டி கிராம மக்களின் போராட்டம் நடைபெற்றது.

**சந்திரா**



படிப்பகம்

www.padippakam.com




ஆபாசப் படச் சுருளை
தியேட்டரிலிருந்து
எடுத்து வந்த காட்சி

படிப்பகம்